
# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2011
ரூ. 7.00





## விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தும்

# வெள்ளை மாளிகையின் விசுவாசி!

# "சமூக விடுதலையே பெண் விடுதலை"

## - அனைத்துலக மகளிர் தினத்தில் புரட்சிகர அமைப்புகளின் சூளுரை!

டென்மார்க்கின் தலைநகர் கோபன்ஹேகனில் 1910-ஆம் ஆண்டு நடந்த சோசலிசத்துக்கான இரண்டாவது அனைத்துலக மாநாட்டில், ஜெர்மனி நாட்டின் தொழிலாளர் தலைவியான தோழர் கிளாரா ஜெட்கின் முன்மொழிந்ததன் அடிப்படையில், மார்ச் 8-ஆம் நாள் அனைத்துலக பெண்கள் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டு 1911-ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்படுகிறது. இவ்வாண்டு மகளிர் தினம் அதன் நூறாவது ஆண்டாகும். ஒரு நூறு ஆண்டுகளான பின்னரும் இன்னமும் பெண்கள் அடிமைகளாக்கப்பட்டிருப்பதையும் குறிப்பாக, இன்றைய உலகமயமாக்கச் சூழலில் அதிகரித்துவரும் பெண்கள் மீதான உழைப்புச் சுரண்டலையும் அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராட அறைகூவியும் பெண்கள் விடுதலை முன்னணியும் புரட்சிகர அமைப்புகளும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் வர்க்க உணர்வோடு இந்நாளைக் கொண்டாடி, பெண் விடுதலைக்கான போராட்டக் குரலை எதிரொலித்தன.



தோழர் கிளாரா ஜெட்கின்

### திருச்சியில்...

மார்ச் 8 அன்று காலை 10 மணியளவில் பெண்கள் விடுதலை முன்னணியின் தோழர்கள், பெண்ணுரிமைப் போராளி தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பட்டாசுகள் வெடித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். பின்னர், திருச்சி ரயில் சந்திப்பிலிருந்து உறையூர் வரை சைக்கிள் பேரணி நடத்தி, ம.க.இ.க. தோழர் துரை.சண்முகத்தின் "வரலாற்றைப் படித்து வர்க்கமாய் எழு தோழி!" என்ற கவிதை அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை உழைக்கும் மக்களிடம் விநியோகித்து, மாலை நடைபெறவுள்ள நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுத்தனர்.

அன்று மாலை 6.30 மணியளவில் உறையூர் கைத்தறி நெசவாளர் மண்டபத்தில் தோழர் நிர்மலா தலைமையில் நடந்த அரங்கக் கூட்டத்தில் தோழர் இந்துமதி, ம.க.இ.க. மையக் கலைக்குழு தோழர் கோவன் ஆகியோர் போராட்டத்திலிருந்து உருவான மகளிர் தின வரலாற்றையும், முதலாளித்துவ ஊடகங்களும் அமைப்புகளும் இதைக் கொண்டாட்ட தினமாகக் கூத்தடிப்பதை அம்பலப்படுத்தியும், சமூக விடுதலைக்காகப் போராடுவதே பெண் விடுதலையின் உண்மையான பொருள் என்பதை உணர்த்தியும் சிறப்புரையாற்றினர். சமூகத்தில் எது நடந்தாலும் எனக்கென்ன என்று எதிலும் பங்கேற்காமல் ஒதுங்கி நிற்பவர்களை நையாண்டி செய்து நடத்தப்பட்ட ''ஒதுங்கும் போக்கு'' எனும் நாடகம் பார்வையாளர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்ததோடு, நமது உரிமைகளைப் போராடினால்தான் பெற முடியும் என்பதை உணர்த்துவதாக அமைந்தது. ம.க.இ.க. மையக் கலைக்குழுவினர் நடத்திய ஸ்பெக்ட்ரம்- கார்ப்பரேட் முதலாளிகளின் ஊழல் புராணமும், சிறுவர்களின் கலை நிகழ்ச்சியும், பச்சோந்தி எனும் நாடகமும் பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

### சேலத்தில்...

உழைக்கும் வர்க்கப் பெண்களின் போராட்டத்தில் பிறந்த மகளிர் தினத்தில், நாலு ரோடு - சாமுண்டி வணிக வளாகத்திலுள்ள இலக்குமி அரங்கில் பெண்கள் விடுதலை முன்னணி கிளை தொடக்க விழாவும் அரங்கக் கூட்டமும் நடைபெற்றன. இவ்விழாவையொட்டி சுவரொட்டிகள் - பிரசுரம் மூலம் கல்லூரிகளிலும் பொது இடங்களிலும் பெ.வி.மு.வினர் வீச்சாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். மார்ச் 8-ஆம் நாளன்று மாலையில் பெண்கள் விடுதலை முன்னணி தோழர்கள் முழக்கமிட்டபடியே ஊர்வலமாக அரங்கத்துக்கு வர, தோழர் கந்தம்மா தலைமையில் நடந்த கிளை தொடக்க விழா கூட்டத்தில், "பெண் எந்தக் காலத்திலும் போராடாமல் இருந்ததில்லை" என்ற பிரசுரத்தை பெ.வி.மு. மாவட்டத் தலைவர் தோழர் பத்மா வெளியிட, தோழர் தமிழ்ச் செல்வி பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார். ம.உ.பா.மையத்தின் மாவட்டச் செயலர் வழக்குரைஞர் மாயன், பு.ஜ.தொ.மு.வின் தோழர் நேசன் ஆகியோர் புரட்சிப் பாதையில் முன்னேற பெ.வி.மு.வுக்கு வாழ்த்துரை வழங்கினர்.



திருச்சியில்...

### பென்னாகரத்தில்...

மகளிர் தினத்தையொட்டி பெ.வி.மு. சார்பில் மார்ச் 12 அன்று கலைமகள் பள்ளி அரு

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 6
ஏப்ரல் 2011

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## அணு உலை வெடிப்பு:

# பேரழிவில் ஜப்பான்! மரணவாயிலில் இந்தியா!

ஜப்பானில் நிகழ்ந்துள்ள பேரழிவைக் கண்டு மனித இனம் பேரதிர்ச்சியில் மூழ்கிப் போயுள்ளது. நிலநடுக்கமும் அதைத் தொடர்ந்து உருவான ஆழிப்பேரலையும் ஜப்பானின் வடகிழக்குக் கடற்கரைப் பகுதியில் கோரத்தாண்டவமாடி அந்நாட்டையே நிலைகுலையச் செய்துள்ளன. பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு, இலட்சக் கணக்கானோர் தங்கள் உற்றார்- உறவினர், வீடு-வாசலை இழந்து அனாதைகளாகிப் பரிதவிக்கின்றனர். இயற்கையின் சீற்றம் தணிந்துவிட்டாலும், இப்போது அணுஉலைகளின் சீற்றத்தால் அந்நாடு தத்தளித்துக் கொண்டிருக்கிறது. கடற்கரையோரமாக அமைந்துள்ள புகுஷிமா அணு மின் நிலையத்தில் ஒன்றன்பின் ஒன்றாக அணு உலைகள் வெடித்துச் சிதறியதால், அணுஆயுதப் போரின் பேரழிவைச் சந்தித்த ஜப்பான் இன்று, அதைவிடக் கொடூரமான தாக்குதலால் அவலத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

ஜப்பானின் மின்சாரத் தேவையில் மூன்றில் ஒரு பங்கை நிறைவு செய்வதால், அந்நாட்டில் 50-க்கும் மேற்பட்ட அணு மின் நிலையங்கள் உள்ளன. ஜப்பானில் ஆழிப்பேரலையால் மின்சாரம் நின்றுவிட்டதால், அணு உலைகளைக் குளிர்ச்சியடையச் செய்யும் குழாய்களும் செயலிழந்து அணு உலைகள் வெடித்துச் சிதறியுள்ளன. பற்றி எரியும் புகுஷிமா அணுமின் நிலையத்தில் முதலாவது அணு உலையின் வெப்பத்தைத் தணிக்க கடல் நீரைப் பாய்ச்சி, உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் கடல் நீரில் அயோடின் 131 எனும் அணுக்கதிர் வீச்சு பரவியுள்ளது. இரண்டாவது அணு உலையிலிருந்து ஒரு லட்சம் மில்லி சீவர்ட் அளவுக்குக் கதிர்வீச்சு காற்றில் பரவியுள்ளது. இது, மனிதனின் ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்து மரணத்தை விளைவிக்கும். தற்போது மூன்றாவது அணு உலை வெடித்து உருகி புளூட்டோனியம் கதிர்வீச்சு நிலப்பகுதியில் பரவி வருகிறது. புளூட்டோனியம் கதிர் வீச்சு ஹைடிரஜன் அணுகுண்டை விட பல மடங்கு பேரழிவை விளைவிக்கக் கூடியது. அணுக்கதிர் வீச்சால், நிலமும் நீரும் காற்றும் கடலும் நஞ்சாகிப் போயுள்ளதால், தொழில்நுட்பத்தில் முன்னேறிய வல்லரசு நாடான ஜப்பான் மட்டுமின்றி, அதைச் சுற்றியுள்ள உலக நாடுகளும் அச்சத்தில் உறைந்துள்ளன.

இத்தனைக்கும் பிறகும், இது இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விபத்து என்றும், மற்றபடி அணு உலைகள் தொழில்நுட்ப ரீதியில் பாதுகாப்பானவைதான் என்றும் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் எடுபிடிகளும் வாதிடுகின்றனர். மிகப் பெரிய வல்லரசு நாடான ரஷ்யாவின் செர்னோபில்லில் நடந்த அணு உலை வெடிப்பும் பேரழிவும் பின்தங்கிய தொழில்நுட்பத்தாலும் கம்யூனிச அதிகார வர்க்க அலட்சியத்தாலும் ஏற்பட்ட பேரழிவு என்றும், முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில் மேம்பட்ட தொழில்நுட்பம் கொண்டு கண்காணிக்கப்படுவதாகவும் அவர்கள் பிதற்றினர். இது கடைந்தெடுத்த பித்தலாட்டம் என்பதை, உயர் தொழில்நுட்பம் கொண்ட வளர்ந்த ஏகாதிபத்தி வல்லரசு நாடான ஜப்பானில் நடந்துள்ள அணு உலை வெடிப்பும் கோரமான பேரழிவும் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது.

ஜப்பானில் நடந்த பேரழிவுக்குப் பிறகு, மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் அணு உலை பாதுகாப்புக்கான அவசர நடவடிக்கைகள் எடுத்து வரும் நிலையில், ஏழை நாடான இந்தியாவில் அணு உலைகள் முற்றிலும் பாதுகாப்பாக உள்ளதாக அறிவிக்கிறது, மன்மோகன் அரசு. ரயில் விபத்து, தீ

விபத்து, ஏன், பாதாளக் குழியில் விழுந்துவிட்ட சிறுவனை மீட்கக் கூடத் தடுமாறி நிற்கும் இந்திய அரசு, அணு உலைகள் வெடித்தால் மக்களைப் பாதுகாப்பாக மீட்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்தியாவில் உள்ள அணு உலைகளின் பாதுகாப்பு பற்றி சுயேட்சையான ஆய்வு எதுவும் இதுவரை செய்யப்படவுமில்லை. பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட அணு உலைகள் பாதுகாப்பற்றவை என்று ஏகாதிபத்திய நாடுகளே அவற்றை மூடிவிடும் நிலையில், தாராப்பூர் அணு மின் திட்டம் நிறுவப்பட்டு 40 ஆண்டுகளான பின்னரும் இன்னமும் பாதுகாப்பாக இருப்பதாக இந்திய அரசு புளுகி வருகிறது. 1993-இல் நரோரா அணு உலை தீ விபத்து, கைகா அணு உலையில் கோபுரம் வீழ்ந்த விபத்து, கல்பாக்கம் உள்ளிட்ட பல அணு உலைகளில் அடிக்கடி கதிரியக்கம் பரவி வருவது, ஜாடுகுடா யுரேனியச் சுரங்கத்தில் கதிரியக்கம் பரவி பல தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பது - முதலியன இந்திய நாட்டு மக்கள் அணுசக்திக்காக பலிகிடாவாக்கப்பட்டுள்ளதை நிரூபித்துக் காட்டுகின்றன. இந்தியாவிலுள்ள 21 அணு உலைகள் அபாயகரமான நிலையில் உள்ளதாக பல சுற்றுச்சூழல் அறிவியலாளர்கள் எச்சரித்துள்ள போதிலும், அவை பற்றிய உண்மைகளை வெளியிடாமல் நாட்டின் பாதுகாப்பு ரகசியம் என்ற பெயரில் ஆட்சியாளர்கள் மூடிமறைத்து வருகின்றனர்.



அணுமின் நிலையங்களை மூடக்கோரி டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டம்.

அணுசக்தி எவ்வளவு அபாயகரமானது என்பதற்கு ஜப்பானே மனித இனத்திற்கு உதாரணமாகியுள்ள நிலையில், நாட்டு மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதம் செய்யும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக, இலாப வெறியோடு அலையும் அமெரிக்க அணுசக்தி கம்பெனிகளுக்கு ஊழியம் செய்யும் வகையில், அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றி நாட்டு மக்களைப் பேராபத்தில் சிக்க வைத்துள்ளது, இந்திய அரசு. அனல் மின்நிலையம், புனல் மின்நிலையம் முதலான மரபுசார் சக்தியைக் கொண்டு மின்சாரம் தயாரித்துக் கொள்வதற்கான வளம் இந்தியாவில் நிறைந்துள்ள போதிலும், காலாவதியாகிப்போன தொழில்நுட்பத்துடன் கார்ப்பரேட் கொள்ளைக்காகவே அணுமின் திட்டங்கள் இங்கு திணிக்கப்படுகின்றன.

இதுவரை உலகில் நடந்த அணுஉலை விபத்துகளில் 71 சதவீதத்துக்கும் மேலாக அமெரிக்காவில் நடந்துள்ள நிலையில், அமெரிக்கா அணுசக்தி அறிவியல் -தொழில்நுட்பத்தில் முன்னேறியது என்று கூறி, முதற்கட்டமாக 60,000 கோடி ரூபாய்க்கு அணு உலைகளை அமெரிக்க ஏகபோக நிறுவனங்களிடமிருந்து வாங்கவும் கைக்கூலி மன்மோகன் அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு முன்னதாக, அணுஉலை விபத்துக்கான இழப்பீடு குறித்த துரோகத்தனமான சட்டம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது. விபத்து ஏற்பட்டால், அமெரிக்க ஏகபோக நிறுவனங்களிடமிருந்து அணு உலைகளை வாங்கி இயக்கும் இந்திய அரசும் தனியார் தரகு முதலாளித்துவ நிறுவனங்களும்தான் பொறுப்பேற்க வேண்டும்; வாங்கப்படும் அணு உலைகளின் தரம், பாதுகாப்பு, உத்திரவாதத்துக்கு அதை விற்பவர்கள் பொறுப்பல்ல என்பதுதான் அமெரிக்க நிறுவனங்களின் கொள்ளைக்காக நிறைவேற்றப்பட்டுள்ள இச்சட்டத்தின் முக்கிய அம்சம்.

அணு உலை வெடிப்பினால் பேரழிவில் தத்தளிக்கும் ஜப்பான்.



போபால் நச்சுவாயுவால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி அவர்களது சந்ததியினரும் இன்னமும் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், தலைமுறை தலைமுறையாகப் பாதிப்பை ஏற்படுத்தும் அணுக்கதிர் வீச்சுக்கு இலக்காகும் வகையில் நாட்டு மக்களை மரணவாயிலில் நிறுத்தியுள்ளது, துரோகி மன்மோகன் கும்பல். மனித குலத்துக்குப் பேரழிவை விளைவிக்கும் அணுமின் திட்டங்களை ரத்துசெய்யவும், அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தைக் கிழித்தெறியவும், மக்கள் விரோத மன்மோகன் கும்பலையும் அதன் ஏகாதிபத்திய எஜமானர்களையும் வீழ்த்துவதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதுதான் நாட்டு மக்களின் முதன்மைக் கடமை என்பதையே ஜப்பானில் நடந்துள்ள பேரழிவு பாடமாக உணர்த்துகிறது. ●

# கல்விக் கொள்ளையர்களை உலுக்கிய முற்றுகைப் போராட்டம்!

நீதிபதி கோவிந்தராசன் கமிட்டி அறிவித்த கட்டணப்படி மட்டுமே மாணவர்களிடம் பள்ளிக் கட்டணத்தை வசூலிக்க வேண்டும், கட்டண விவரத்தைப் பள்ளிகளில் ஒட்ட வேண்டும் என்று தமிழக அரசு அறிவித்துள்ள போதிலும், பல தனியார் பள்ளிகளில் இன்னமும் கூடுதலாகக் கட்டணத்தை வசூலிப்பதும், எதிர்த்துக் கேட்டால் பள்ளியிலிருந்து மாணவரை விலக்கி, நகராட்சிப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளுமாறு ஏழைப் பெற்றோரை மிரட்டுவதும் தமிழகமெங்கும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

கடலூர் மாவட்டம் - விருத்தாசலத்தில் தனியார் கல்விக் கொள்ளையர்களின் கொட்டம் தலைவிரித்தாடிய நிலையில், பள்ளி நிர்வாகத்தால் துன்புறுத்தப்பட்ட பெற்றோர்கள் கூடுதல் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுடன் மாவட்டக் கல்வி அதிகாரிக்குப் புகார் மனு கொடுத்து நியாயம் கேட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையம், நீதிபதி கோவிந்தராசன் கமிட்டியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டண விவரங்களை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு அனைத்து பள்ளிக்கூட வாயில்களில் விநியோகித்து, பெற்றோரைக் கூட்டி ஆலோசனைக் கூட்டம் நடத்தி போராட முன்வருமாறு அறைகூவியது. அதன் தொடர்ச்சியாக, தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராக நகரெங்கும் தெருமுனைப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, கூடுதல் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்காத மாவட்ட கல்வி அலுவலகத்தை மார்ச் 1 அன்று முற்றுகையிடப் போவதாக அறிவித்து எச்சரிக்கை விடுத்தது.

இப்பிரச்சார இயக்கம் வீச்சாகப் பரவி வருவதையறிந்த கடலூர் மாவட்ட தனியார் பள்ளி முதலாளிகள் சங்கம் அவசரமாகக்கூடி, ஆண்டுக்கு 15 சதவீத அடிப்படையில் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என தீர்மானம் போட்டு, மாநாடு நடத்தி கொக்கரித்தது. இந்த அநீதிக்கும் திமிருக்கும் எதிராகவும் சட்டபூர்வ உரிமைக் காகவும் தயக்கத்தையும் அச்சத்தையும் தவிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தை வீடு வீடாக பெற்றோரிடம் விளக்கி, முற்றுகைப் போராட்டத்துக்கு ம.உ.பா.மையம் அணிதிரட்டியது. மார்ச் முதல் நாளன்று ம.உ.பா.மையத்தின் தலைமையில் திரண்ட பெற்றோர்கள், போலீசு தடையை மீறி விருத்தாசலம் பேருந்து நிலையத்திலிருந்து முழக்கமிட்டபடியே ஊர்வலமாக வந்து மாவட்ட கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டனர். மாவட்ட கல்வி அதிகாரியோ கூடுதல் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க தனக்கு அதிகாரமில்லை என்றார். அதிகாரமுள்ள அதிகாரி விளக்கம் அளிக்கும்வரை முற்றுகை தொடரும் என எச்சரித்ததும், மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் நேரில் வந்து விளக்கமளிக்க ஒப்புக் கொண்டார்.

ஆய்வாளர் வருவதை ஆட்டோ மூலம் நகரெங்கும் ம.உ.பா.மையம் பிரச்சாரம் செய்ததால், பெற்றோரும் உழைக்கும் மக்களும் பத்திரிகையாளர்களும் இக்கூட்டத்திற்குத் திரண்டு வந்து, தனியார் பள்ளிகளில் சட்ட விரோதமாக கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதையும், பெற்றோரை மிரட்டுவதையும், ஆய்வாளர் கண்காணித்து நடவடிக்கை எடுக்காததையும் கொட்டித் தீர்த்தனர். அரண்டுபோன அதிகாரி, அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்துக்கு மேலாக யாரும் கட்டணம் செலுத்த வேண்டாம் என்று உறுதிபடக் கூறியதோடு, கூடுதல் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

அதைத் தொடர்ந்து, குழந்தைகளைப் பணயக் கைதிகளாக்கி கொள்ளையடிப்பதைத் தடுக்க ''தனியார் பள்ளி மாணவர்கள் நல பெற்றோர் சங்கம்'' என்ற அமைப்பு பெற்றோர்களால் உருவாக்கப்பட்டு நிர்வாகிகளும் தேர்வு செய்யப்பட்டனர். தனியார் பள்ளிகளின் கொள்ளையைக் கண்டு செய்வதறியாது திகைத்து நின்ற பெற்றோர்கள், அச்சத்தையும் தயக்கத்தையும் உதறி புதிய நம்பிக்கையைப் பெற்றிருப்பதே ம.உ.பா. மையத்தின் போராட்டத்துக்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றி. விருத்தாசலத்தில் நடந்ததைப் போல தமிழகமெங்கும் உழைக்கும் மக்கள் அச்சத்தையும் தயக்கத்தையும் தவிர்த்து போராடத் தொடங்கினால், தனியார் பள்ளிகளின் சட்ட விரோத பகற்கொள்ளையும் கொட்டமும் தவிடு பொடியாகிவிடும்.




–மனித உரிமைப் பாதுகாப்பு மையம்,
விருத்தாசலம்.

# விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தும்

# வெள்ளைமாளிகையின் விசுவாசி!

**மன்மோகன், காங்கிரசு, பா.ஜ.க. பற்றி நக்சல்பாரி புரட்சியாளர்கள் சொல்லிவருவது ஆணித்தரமாக நிரூபணமாகிவிட்டது.**

உலகம் முழுவதும் உள்ள அரசுகளின் திரை மறைவுச் சதிகளையும், இரகசியங்களையும் அம்பலப் படுத்தி வரும் விக்கிலீக்ஸ் என்னும் இணையதளம், ஈராக் மற்றும் ஆப்கான் போர்களில் அமெரிக்கா இழைத்த போர்க்குற்றங்களை அமெரிக்கச் சிப்பாய் கள், தமது இராணுவத் தலைமைக்கு அனுப்பிய குறிப்புகளிலிருந்தே அம்பலப்படுத்தியது. அது மட்டு மன்றி, அமெரிக்காவுக்கும் பல்வேறு நாடுகளின் அரசுத் தலைவர்களுக்கும் இடையிலான கள்ள உறவுகள் மற்றும் சதிகளையும் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது.

பல்வேறு நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதர்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் இணையத்தின் மூலம் அமெரிக்க அரசுக்கு அனுப்பும் இரகசியக் கடிதங்களை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தத் தொடங்கியவுடன், அமெரிக்காவின் முகவிலாசம் கிழிந்துவிடும் என்று அஞ்சிய அந்நாட்டின் வெளியுறவுத்துறை செயலர் ஹிலாரி கிளிண்டன், அனைத்து நாடுகளின் அரசு களையும் முன்கூட்டியே அழைத்துப் பேசி, இது குறித்து எச்சரிக்கை செய்தார்.

விக்கிலீக்ஸின் வசம் இருக்கும் ஆவணங்களில், இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், அமெரிக்க வெளியுறவுத் துறைக்கு அனுப்பிய இரகசியச் செய்திக் குறிப்புகளும் அடக்கம். இந்த ஆவணங்களைத் தற்போது 'தி இந்து' ஆங்கில நாளேடு விக்கிலீக்ஸிடமிருந்து வாங்கி வெளியிட்டு வருகிறது.

விசா வழங்குவதற்கு மட்டும்தான் வெளிநாட்டுத் தூதரகங்கள் இருக்கின்றன என்று மக்கள் வெகுளித் தனமாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். தங் களுக்குச் சாதகமான அதிகாரிகள், அமைச்சர்களைப் பதவியில் அமர்த்துவது தொடங்கி, அரசின் கொள்கை களையே மாற்றுவது வரை எல்லா விசயங்களிலும் அமெரிக்கத் தூதர்கள் தலையிடுகின்றனர் என்பதை இந்து நாளேட்டில் இதுவரை வெளியான விக்கிலீக்ஸ் செய்திகள் காட்டுகின்றன. காங்கிரசு, பாஜக அரசுகள் அமெரிக்க எடுபிடிகளே என்பதையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள கடிதங்கள் நிரூபிக்கின்றன.

### ஓட்டுக்கு நோட்டு

''ஆட்சியே கவிழ்ந்தாலும், இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவேன்'' என்று மன்மோகன் சிங் சாமியாடியதும், இடதுசாரிகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை திரும்பப்பெற்றதையொட்டி, நாடாளு மன்றத்தில் காங்கிரசு அரசு பெரும்பான்மை இழந்ததும் நாம் அறிந்ததுதான். அன்று முலாயம் சிங் கட்சியின் ஆதரவைப் பெற்ற பின்னரும் பெரும்பான்மை கிடைக்காததால், உதிரிக் கட்சிகளை விலை பேசுவது, பாரதிய ஜனதா எம்.பி.க்களை விலை பேசி, காங்கிரசுக்கு ஆதரவாக வாக்களிக்க வைப்பது அல்லது ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாமலிருக்கச் செய்வது போன்ற களவாணித்தனங்களில் காங்கிரசு ஈடுபட்டது. அவ்வாறு பேரம் பேசும் நடவடிக்கைகளை சி.என்.என். -ஐ.பி.என். தொலைக்காட்சி இரகசியமாகப் படமெடுத்து ஒளிபரப்பியது. நாடாளு மன்றத்தில் கட்டுக்கட்டாக நோட்டுகள் கொட்டப்பட்டு, அந்தக் காட்சி நாடு முழு வதும் ஒளிபரப்பப்பட்டு காங்கிரசின் களவாணித்தனம் நாறியது.

தமது வாக்குகளை விலைக்கு வாங்கத் தரப்பட்ட பணத்தை நாடாளுமன்றத்தில் காட்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள். (கோப்புப் படம்)




உத்தமர் மன்மோகன் சிங்கின் அரசு நடத்திய இந்த குதிரை பேரம், விக்கி லீக்ஸின் மூலமும் தற்போது அம்பலமாகி

யுள்ளது. ராஜீவ் குடும்பத்தின் நண்பரும், முன்னாள் அமைச்சருமான கேப்டன் சதீஷ் சர்மாவின் உதவியாளர் நசிகேத் கபூர் என்ற நபர் எம்.பி.க்களை விலை கொடுத்து வாங்குவதற்காகப் பெட்டிபெட்டியாக வைத்திருந்த பணத்தைத் தன்னிடம் காட்டியதாகவும், இன்னும் 60 கோடி ரூபாய் வீட்டில் இருப்பதாகத் தன்னிடம் அவர் கூறியதாகவும் அமெரிக்கத் தூதரக அதிகாரி அமெரிக்க வெளியுறவுத் துறைக்குச் செய்திக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளார். அஜீத் சிங்கின் ராஷ்ட்ரிய லோக் தளம் கட்சி எம்.பி.க்களுக்குத் தலைக்கு 10 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டதாகவும், அகாலி தள எம்.பி.க்களை வளைக்கும் பொறுப்பை மன்மோகன் சிங்கே ஏற்றிருப்பதாகவுமென பல தகவல்களை இந்தச் செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது. ஓட்டெடுப்பு நடப்பதற்குச் சரியாக 5 நாட்கள் முன்னதாக அனுப்பப்பட்ட இந்தச் செய்தி, அரசை ஆதரித்து எத்தனை ஓட்டு விழும், எதிர்த்து எவ்வளவு விழும், எத்தனை பேர் ஓட்டுப்போடமாட்டார்கள் என்பதைக் கிட்டத்தட்ட துல்லியமாகக் கூறியிருக்கிறது.



**மேலிருந்து கீழ் வரை வெவ்வேறு மட்டங்களில் எங்கெங்கெல்லாம் தனக்குக் கையாட்களையும் உளவாளிகளையும் நண்பர்களையும் அமெரிக்கா உருவாக்கி வைத்திருக்கிறது என்பது குறித்த ஒரு சித்திரத்தை விக்கிலீக்ஸ் செய்திகள் வழங்குகின்றன**

இப்பிரச்சினை தற்போது நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டவுடன், ''அது போன மாசம்'' என்று வடிவேலு பாணியில் பதிலளித்த பிரணாப் முகர்ஜி, ''அது 2009-இல் 14-ஆவது மக்களவையில் நடந்த பிரச்சினை. இது 15-ஆவது மக்களவை'' என்று வெட்கங்கெட்ட முறையில் வாதாடினார். மன்மோகன் சிங் வழக்கம் போல, ''எனக்குத் தெரியவே தெரியாது'' என்று சாதித்தார். ''நசிகேத் கபூர் என்ற நபர் யாரென்றே எனக்குத் தெரியாது'' என்றார் சதீஷ் சர்மா. நசிகேத் கபூர் முன்னாள் இளைஞர் காங்கிரசு பொதுச் செயலாளர், அதிகாரத் தாழ்வாரங்களில் அலையும் தரகர் என்பதை ஊடகங்கள் அம்பலப்படுத்தின.

குதிரை பேரம் நடத்தித்தான் 2009-இல் அணுசக்தி ஒப்பந்தத்தை காங்கிரசு நிறைவேற்றியது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், குதிரை பேர நடவடிக்கை உள்ளிட்ட இந்த முயற்சிகளை அமெரிக்கத் தூதரக அதிகாரியும், காங்கிரசு கட்சியினரும் எவ்வளவு நெருக்கமாக இருந்து திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள் என்பதையே இவர்களுக்கு இடையிலான பரிமாற்றங்கள் காட்டுகின்றன.

இது பிரச்சினையின் ஒரு பகுதிதான். அணுசக்தி பிரச்சினையில் காங்கிரசுக்கு ஆதரவாக பாரதிய ஜனதாவைத் திருப்பும் பொருட்டு, அத்வானியிடம் சென்று பேசுமாறு முன்னாள் அரசுத்தலைவர் அப்துல் கலாமைக் கேட்டுக் கொண்டதாகவும், கலாம் சென்று பேசியதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் அன்றைய அமெரிக்கத் தூதர் முல்போர்டு. ''அப்துல் கலாம் கொடுத்த அரைமணி நேர விளக்கத்தில் மனம் மாறித்தான் ஒப்பந்தத்தை ஆதரித்தேன்'' என அன்று முலாயம் கூறியதையும் இங்கே நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இதுதான் இந்தியாவின் முன்னாள் அர த்தலைவருடைய யோக்கியதை.

### விசுவாசிக்குப் பாதுகாப்பு

இதுவரை இந்து நாளேட்டில் வெளிவந்திருக்கின்ற அமெரிக்கத் தூதரகக் கடிதப் பரிவர்த்தனைகள் பலவற்றிலும் ஊடாடி நிற்கும் ஒரு விசயம், மன்மோகன் சிங் குறித்து அமெரிக்கா காட்டும் விசேட அக்கறை. அவருக்கெதிராக எதிர்க்கட்சிகளிலோ, அதிகார வர்க்கத்திலோ, காங்கிரசு கட்சிக்குள்ளேயோ ஒரு சிறிய குரல் எழும்பினாலும்கூட அமெரிக்கா துடிதுடித்துப் போகிறது. அர தந்திர உறவின் வரம்புகளையெல்லாம் மீறி மன்மோகன் சிங்கை ஆதரித்துக் களத்தில் இறங்குகிறது. பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருக்கும் அமெரிக்காவின் கையாள்தான் மன்மோகன் சிங் என்ற உண்மையை, இதுவரை புரிந்து கொள்ளாதவர்கள்கூட விக்கிலீக்ஸ் கடிதங்களைப் படித்த பிறகு புரிந்து கொள்ள முடியும்.

'பாகிஸ்தான், இந்தியாவுக்குள் பயங்கரவாதச் செயல்களைச் செய்யும் குழுக்களுக்குப் பயிற்சியளித்து, எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை வளர்க்கிறது' என்பதுதான் 2004-ஆம் ஆண்டு மன்மோகன் சிங் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் வரை பாகிஸ்தான் குறித்த இந்திய அரசின் நிலைப்பாடாக இருந்தது. பா.ஜ.க.வின் ஆட்சிக்காலத்தில் மட்டுமல்ல, அதற்கு முந்தைய காங்கிர ஆட்சியிலும் இந்திய அரசின் நிலைப்பாடு இதுதான். பாகிஸ்தான் அரசோ, தானும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுதான் என்றும், இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் பாகிஸ்தான் அரசுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் மறுத்து வருகிறது. மேலும், பயங்கரவாதத்துக்கு எதிரான புலனாய்வுகளை இந்தியா மற்றும் பாக்.

அரசுகள் இணைந்து மேற்கொள்ளலாம் என்று வலியுறுத்தியும், இந்திய அரசு இதனைத் தொடர்ந்து மறுத்து வந்தது.

ஆனால், மன்மோகன் சிங் பிரதமரான பின், அமெரிக்காவின் ஆணையை ஏற்று, பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களை இரு அரசுகளும் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஒப்புக் கொண்டார். தெற்காசியப் பகுதியில் தனது போர்த்தந்திரத்துக்குப் பொருத்தமாக அமெரிக்கா மேற்கொள்ளச் சொன்ன இந்த மாற்றம் இந்திய ஆளும் வர்க்கம் இதுகாறும் கடைப்பிடித்து வந்த பாக். எதிர்ப்புக் கொள்கைக்கு முரணாக இருந்ததால், அன்றைய தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணன் மன்மோகன் சிங்குடன் கருத்து வேறுபட்டிருக்கிறார். உடனே, எம்.கே. நாராயணனை நேரில் சந்தித்துப் பேசியதுடன், பாகிஸ்தான் குறித்த கொள்கை தொடர்பான விசயத்தில் மன்மோகன் சிங் தனது அமைச்சரவைக்குள்ளேயே தனிமைப்படுத்தப்படுவதாக அமெரிக்காவுக்கு செய்தி அனுப்புகிறார், அமெரிக்கத் தூதரக அதிகாரி. அதிகாரவர்க்கத்தினுள் மட்டுமல்ல, அமைச்சரவைக்குள்ளும் மன்மோகனுக்கு யார், எந்த விசயத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்பதை ஆங்காங்கே உள்ள தனது உளவாளிகள் மூலம் கண்காணிக்கிறது அமெரிக்கத் தூதரகம்.

இரண்டாவது முறையாக மன்மோகன் அரசு பதவியேற்றபோது பிரணாப் முகர்ஜி நிதியமைச்சராக்கப் பட்டார். அப்போது இந்த நியமனம் குறித்து அதிர்ச்சி தெரிவித்த ஹிலாரி கிளிண்டன் அமெரிக்கத் தூதரகத்திடம் ''அலுவாலியாவோ சிதம்பரமோ அமைச்சராக்கப்படாமல், முகர்ஜி அமைச்சராக்கப்பட்டது ஏன்? முகர்ஜியின் பொருளாதாரத் திட்டம் என்ன? மன்மோகன் சிங்கின் பொருளாதாரச் சீரமைப்புக் கொள்கை பற்றி முகர்ஜியின் கருத்து என்ன?'' என்று கண்டறியும்படிக் கேட்டிருக்கிறார். மன்மோகன் சிங்கின் பொருளாதாரத் திட்டங்களுக்கு பிரணாப் முகர்ஜியால் ஒருவேளை தடங்கல் ஏற்பட்டு விடுமோ என்று அமெரிக்கா துடித்திருக்கிறது. அது மட்டுமன்றி, தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே. நாராயணன் மாற்றப்பட்ட போது, 'அவரை ஏன் மாற்றினீர்கள்? அவருக்கும் மன்மோகனுக்கும் ஏதாவது பிரச்சனை இருக்கிறதா?' என்று கவலையோடு ப.சிதம்பரத்திடம் விசாரித்திருக்கிறார் அமெரிக்கத் தூதர். சர்வதேச அணுசக்தி முகமையில் அமெரிக்காவின் ஆணைப்படி இரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்ததைத் தொடர்ந்து மன்மோகனுக்கு எதிர்ப்புகள் எழுந்தவுடன், அது குறித்து அமெரிக்கா பெரிதும் கவலைப்பட்டிருக்கிறது என்பதும் அமெரிக்க தூதர் அனுப்பிய செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

### பாரதிய ஜனதாவின் இரட்டை வேடம்

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் அயலுறவுக் கொள்கை அமெரிக்க அடிமைத்தனமானது எனக் காட்டமாக விமர்சித்து, பா.ஜ.க.வின் தேசிய செயற்குழு 2005-இல் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், அதற்கடுத்த நாளே அக்கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சேஷாத்ரிசாரி அமெரிக்கத் தூதர்ப்ளேக்கிடம், ''அத்தீர்மானத்தை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை'' என்று சொல்லி இருக்கிறார். ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அணுசக்தி ஒப்பந்ததை மீளாய்வுக்கு உட்படுத்துவோம்'' என்று கூறிய அத்வானி, ''அதெல்லாம் சும்மா காங்கிரசை எதிர்த்து அரசியல் பண்ணுவதற்காக பேசியது. சர்வதேச ஒப்பந்தங்களையெல்லாம் தாங்கள் மீறப்போவதில்லை'' என்று அமெரிக்கத் தூதரிடம் தன்னிலை விளக்கம் தந்துள்ளார். பா.ஜ.க.வின் அருண் ஜேட்லியோ, ''இந்துத்வா என்பது இந்து ஓட்டு வங்கியைக் கவர்வதற்காக வைத்துள்ள ஒரு சந்தர்ப்பவாதமான கொள்கை. அவ்வளவுதான். அதனைத் தேவைக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்வோம்'' என்று அமெரிக்கத் தூதரிடம் பேசியிருக்கிறார். விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கும் இந்தச் செய்திகளெல்லாம், பார்ப்பன பாசிஸ்டுகளின் முகமூடியையும் கிழித்




**''மணிசங்கர் அய்யர் வெளியேற்றப்பட்டு விட்டார். நம்முடைய (அமெரிக்க) ஆதரவாளரான முரளி தியோராவிடம் பெட்ரோலியத் துறை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது'' என அமெரிக்கத் தூதரகம் மகிழ்ச்சியோடு செய்தி அனுப்பியிருக்கிறது**



**ராடியா டேப் வெளியானவுடனே, ''காபினெட்டை முடிவு செய்வது பிரதமரா, ராடியாவா?'' என்று துள்ளிக் குதித்த சோ, சு.சாமி வகையறாக்கள், 'காபினெட்டை அமெரிக்கா தீர்மானிப்பது' குறித்து அதிர்ச்சி எதுவும் தெரிவிக்கவில்லை**

தெறிந்திருப்பதுடன், அவர்களுடைய அமெரிக்க அடிவருடித்தனத்தையும் அடையாளம் காட்டியிருக்கின்றன.

### அமைச்சரவை தீர்மானிக்கப்படுவது டெல்லியிலா, அமெரிக்காவிலா?

இரான் - சீனா - பாகிஸ்தான் - இந்தியாவை இணைக்கும் எரிவாயுக் குழாய் ஒப்பந்தம் ஏறத்தாழ கையெழுத்திடப்படவிருந்த நிலையில், அமெரிக்காவின் அன்றைய வெளியுறவுச் செயலர் கண்டலிசாரைஸ், நேரடியாக இந்தியாவுக்கு வந்து அதனைத் தடுத்து நிறுத்தியது, அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு இந்தியாவை நிர்ப்பந்தித்தது, இதனை ஒட்டி இரான் எரிவாயுக் குழாய்த் திட்டத்தை முன்னெடுத்த மணிசங்கர் அய்யரிடமிருந்து பெட்ரோலியத் துறை பிடுங்கப்பட்டு, முரளி தியோரா அந்தத் துறையின் அமைச்சராக்கப்பட்டது, அமெரிக்காவின் ஆணைப்படி சர்வதேச அணுசக்தி முகமையில் இரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்தது ஆகியவை குறித்து புதிய ஜனநாயகம் இதழில் முன்னரே அம்பலப்படுத்தி எழுதியிருக்கிறோம்.

''மணிசங்கர் அய்யர் வெளியேற்றப்பட்டுவிட்டார். நம்முடைய (அமெரிக்க) ஆதரவாளரான முரளி தியோராவிடம் பெட்ரோலியத் துறை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது'' என்று வெளிப்படையாக மகிழ்ச்சி தெரிவித்து கண்டலிசாவுக்குச் செய்தி அனுப்பியுள்ளார் அமெரிக்கத் தூதர். அது மட்டுமல்ல, மன்மோகன் சிங் செய்துள்ள அமைச்சரவை மாற்றம், தாங்கள் எதிர்பார்த்தபடி வந்திருப்பதாகவும், அமெரிக்காவின் நோக்கங்களை இந்தியாவில் நிறைவேற்றிக் கொள்வதற்குப் பொருத்தமான இப்படிப்பட்ட ஒரு அமைச்சரவை இதுவரை வாய்த்ததில்லை என்றும் அமெரிக்கத் தூதரின் கடிதம் கூறுகிறது. அமெரிக்கத் தூதர் தனது அரசுக்கு அனுப்பும் இரகசியக் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடுகிறார் என்றால், இதனை அமெரிக்க கைக்கூலி அரசு என்று நிறுவுவதற்கு வேறு சான்றுகள் தேவையே இல்லை.

### அரசியல்வாதிகள் -அதிகாரிகளுடன் நெருக்கம்

அமைச்சரவை மாற்றங்களைப் பின்னிருந்து இயக்குவது மட்டுமல்ல, டெல்லி அமைச்சர்கள், உயரதிகாரிகள் முதல் மதுரையில் உள்ள அழகிரியின் ஆட்கள் வரை அனைவருடனும் அமெரிக்கத் தூதரகம் உறவைப் பேணுவதும், அவர்களைக் கண்காணிப்பதும் அம்பலமாகியிருக்கிறது.

இந்தியாவின் வெளியுறவுத் துறை செயலராக சிவசங்கர் மேனன் நியமிக்கப்பட்டவுடன், ''அவர் நமக்கு ஆதரவானவர்தான். இருப்பினும், இயல்பான அமெரிக்க விசுவாசி என்று கூறிவிட இயலாது'' என்று செய்தி அனுப்புகிறார் அமெரிக்கத் தூதர். ''தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா சில்லறை வணிகத்தைத் திறந்துவிட ஏன் தயங்குகிறார்? சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் குறித்து அவரது பார்வை என்ன? பிரணாப் முகர்ஜிக்கும் ரிசர்வ் வங்கி கவர்னர் சுப்பா ராவுக்கும் இடையிலான உறவு எப்படி?'' என அனைத்தையும் விசாரிக்கும்படி டெல்லியில் இருக்கும் அமெரிக்கத் தூதரகத்துக்கு கட்டளை இட்டிருக்கிறார் ஹிலாரி கிளின்டன். எம்.கே.நாராயணன் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து தூக்கப்பட்டு, மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டவுடன், ''உங்களை ஏன் மாற்றினார்கள்? உங்களுக்கும் ப.சிதம்பரத்துக்கும் பிரச்சினையா?'' என்று நாராயணனிடமே அமெரிக்க தூதர் விசாரிக்க, அதற்கு நாராயணன் பதிலும் சொல்லியிருக்கிறார்.

திருமங்கலம் இடைத்தேர்தலின்போது செய்தித்தாள்களின் உள்ளே 5,000 ரூபாய் பணம் வைத்து வாக்காளர்களுக்கு விநியோகித்ததை சென்னையில் உள்ள அமெரிக்க துணைத்தூதரிடம் பெருமை பொங்க விளக்கியிருக்கிறார், அழகிரியின் கையாள் பட்டு ராஜன். சிவகங்கைத் தொகுதியில் சிதம்பரத்தின் மகன் கார்த்திக் சிதம்பரம், எப்படித் திறம்பட பணம் விநியோகித்தார் என்பதைத் துணைத் தூதரிடம் விளக்கியிருக்கிறார், மாநில இளைஞர் காங்கிரசு தலைவர்.

ஒரு வெளிநாட்டுத் தூதரக அதிகாரியிடம் பேசுகிறோம் என்ற தயக்கம் இல்லாமல், எம்.பி.க்களை விலைபேசியது முதல் வாக்காளர்களை விலைபேசுவது வரையிலான விசயங்களை சகஜமாகப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு மேலிருந்து கீழ் வரை அமைச்சர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகிய அனைவருக்கும் அமெரிக்க அதிகாரிகளுடன் நிலவும் நெருக்கம் நம் கவனத்துக்கு உரியது. இவையெல்லாம் ஓரிரு நாளில் உருவாவது அல்ல. மேலிருந்து கீழ் வரை வெவ்வேறு மட்டங்களில் எங்கெங்கெல்லாம்

தனக்குக் கையாட்களையும் உளவாளிகளையும் நண்பர்களையும் அமெரிக்கா உருவாக்கி வைத்திருக்கிறது என்பது குறித்த ஒரு சித்திரத்தை விக்கிலீக்ஸ் செய்திகள் வழங்குகின்றன.

அதிர்ச்சியூட்டும் இத்தகைய ஆவணங்கள் இந்து நாளேட்டில் அன்றாடம் வெளியான போதிலும், தமிழ்ப் பத்திரிக்கைகள் எதுவும் இதனைக் கண்டு கொள்ளவே இல்லை. ராடியா டேப் வந்தவுடனே, ''காபினெட்டை முடிவு செய்வது பிரதமரா, ராடியாவா?'' என்று துள்ளிக் குதித்த சோ, சு.சாமி வகையறாக்கள், 'காபினெட்டை அமெரிக்கா தீர்மானிப்பது' குறித்து அதிர்ச்சி எதுவும் தெரிவிக்கவில்லை. அழகிரியின் அல்லக்கை வரையில் தொடர்பைப் பேணி வரும் அமெரிக்கத் தூதரகம், தமிழ் ஊடக முதலாளிகளைத் தனது சட்டைப்பையில் வைத்திருக்கும் என்பதை சொல்லத்தேவையில்லை.

1947 அதிகார மாற்றத்துக்கு முன் 526 சமஸ்தானங்களிலும் ராஜாக்கள் பேருக்குத்தான் இருந்தனர். அவர்கள் என்ன செய்கின்றனர் என்று கண்காணிக்கவும், எவ்வாறு ஆட்சி நடத்துவது என்று சொல்லித்தரவும் ஒவ்வொரு சமஸ்தானத்திலும் வைஸ்ராயின் பிரதிநிதியாக 'ரெசிடன்ட்' துரை நியமிக்கப்பட்டிருந்தார். இன்று சென்னை, கொல்கத்தா, மும்பை, தில்லி ஆகிய நகரங்களில் இருக்கும் அமெரிக்கத் தூதர்களுக்கும் அக்கால ரெசிடென்ட் துரைகளுக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. அன்று சரிகைக் குல்லா மகாராஜாக்கள்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். இன்று மாண்புமிகு அமைச்சர்கள்; பிரிட்டிஷ் மகாராணிக்குப் பதிலாக மாட்சிமை தங்கிய அமெரிக்காவின் ஒற்றைத் துருவ சாம்ராஜ்யம். இச்சாம்ராஜ்யத்துக்கு விசுவாச சேவை செய்யும் பாதுஷாவாக பிரதமர் பதவியில் ஒரு பங்களா நாய்!

● மருது







# "அமெரிக்க ஏகாதிபத்திய நாயே, லிபியாவை விட்டு வெளியேறு!"

## – புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்.

எவ்வாறு ஈராக்கை எண்ணெய்க்காக அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் ஆக்கிரமிப்பு செய்தனவோ, அதேபோன்று தனது கைப்பாவை அரசை நிறுவி எண்ணெய் வளத்தைச் சூறையாடும் நோக்கத்தோடு லிபியாவில் ஏகாதிபத்திய வல்லரசுகள் தாக்குதலை நடத்தி வருகின்றன. லிபியாவில் கடாஃபியின் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து போராட்டங்கள் நடந்துவரும் சூழலில், கடாபியின் இராணுவத் தாக்குதலிலிருந்து மக்களைக் காப்பது, மனித உரிமை – ஜனநாயகத்தைக் காப்பது என்ற பெயரில் ஐ.நா. பாதுகாப்பு சபையின் அனுமதியுடன் இத்தாக்குதல்களை நடத்தி வருவதன் மூலம், ஏகாதிபத்திய வல்லரசுகள் வெளிப்படையாகப் போர்க்குற்றங்களைச் செய்து வருகின்றன. ஆக்கிரமிப்புக்குத் துணைநிற்கும் ஐ.நா. மன்றம் ஏகாதிபத்திய வல்லரசுகளின் கைப்பாவை மன்றம் என்பதும், ஜனநாயக வேடம் போட்டுத் திரியும் அமெரிக்க அதிபர் ஒபாமா, மனிதக்கறி தின்னும் மிருகம் என்பதும் மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

உலக அமைதிக்கும் ஏழை நாடுகளின் இறையாண்மைக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ள உலகப் பொது எதிரி அமெரிக்காவுக்கு எதிராகவும், லிபியா மீதான ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்புத் தாக்குதலுக்கு எதிராகவும் உலகெங்கும் நடந்து வரும் போராட்டங்களின் ஓரங்கமாக, தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பிரச்சாரம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

''அமெரிக்க ஏகாதிபத்திய நாயே, லிபியாவை விட்டு வெளியேறு!'' என்ற முழக்கத்துடன் திருச்சியில் 25.3.2011 அன்று காலை 11 மணியளவில் ரயில் நிலையச் சந்திப்பு அருகிலும், தஞ்சையில் 25.3.2011 அன்று மாலை 5 மணியளவில் ரயில் நிலையச் சந்திப்பு அருகிலும், ஓசூரில் 26.3.2011 அன்று மாலை ராம்நகரிலும், 28.3.2011 அன்று, பள்ளிப்பாளையத்திலும், கோவை செஞ்சிலுவைச் சங்க கட்டிடம் அருகிலும் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கோர முகத்தை மக்களிடம் திரைகிழித்துக் காட்டி, போராட அறைகூவுவதாக அமைந்தன. தமிழகத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த போதிலும், தேர்தல் ஆணையத்தின் கெடுபிடிகளைக் காட்டி போலீசு அனுமதி மறுத்துள்ள நிலையில், இப்புரட்சிகர அமைப்புகள் சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றன.

– பு.ஜ. செய்தியாளர்கள்

### தமிழக சட்டமன்றத் தேர்தல்:

# கார்ப்பரேட் கொள்ளைக்கு ஜனநாயக மூடுதிரை

## இந்தியப் போலி ஜனநாயகம், தனியார்மயம்–தாராளமயத்தின் பின் கார்ப்பரேட்டிசம் எனப்படும் பாசிசமயமாகிவிட்டது.

புழுத்து நாறிக் கிடக்கிறது, ஓட்டுச்சீட்டு ஜனநாயகம். அதன் உண்மையான பொருளை அறிய விரும்பினால், தமிழகச் சட்டமன்றத் தேர்தலையொட்டி ஓட்டுக் கட்சிகள் நடத்திவரும் பிழைப்புவாத பொறுக்கி அரசியல் கூத்துக்களைப் பார்த்தாலே போதும்.

காங்கிரசுடன் தொகுதிப் பங்கீடு இழுபறி நீடித்த போது, கூட்டணியிலிருந்தும் மைய அரசின் அமைச்சரவையிலிருந்தும் விலகுவதாக அறிவித்த தி.மு.க.வின் வீராவேசம், கடைசியில் குடும்ப நலனைக் காப்பாற்றிக் கொள்வதற்கான கீழ்த்தரமான உத்தியாகிப் போன கோமாளிக் கூத்து உயர்வானதா? அல்லது, இந்தக் கோமாளிக் கூத்துக்கு பக்கமேளம் வாசித்த வீரமணி, திருமா, ஆகியோர் ஆடிய குத்தாட்டம் மேலானதா? துணை நகரங்கள் அமைப்பது, தனியார் உயர் கல்வி நிறுவனங்களின் கொள்ளை, சில்லறை வணிகத்தில் ஏகபோக நிறுவனங்களின் நுழைவு, அரசின் டாஸ்மாக் சாராயக் கடை முதலானவற்றுக்கு எதிராகச் சவடால் அடித்து வந்த பச்சோந்தி ராமதாசு, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தி.மு.க. அரசுக்கு முழுமையாக ஆதரவு தருவோம் என்று இப்போது ஆடும் பிழைப்புவாதக் கூத்து மேலானதா? தன்னிச்சையாக தொகுதிகளை அறிவித்துக் கூட்டணி கட்சிகளுக்குத் தண்ணி காட்டிய ஜெயலலிதா நடத்தி ஆவேசக் கூத்துக்கு முதலிடமா? அல்லது பாசிச ஜெயலலிதாவுடன் கூட்டணி கட்டிக் கொண்ட விஜயகாந்த் மற்றும் இடது - வலது போலி கம்யூனிஸ்டுகள் வீறாப்பு காட்டி நடத்திய கோமாளிக் கூத்து சிறந்ததா? அவமானப்படுத்திவிட்டதாகக் கூறித் தேர்தலைப் புறக்கணித்து காயடிக்கப்பட்ட பன்றியைப் போல கத்திக் கொண்டிருக்கும் வைகோவின் கூத்து உயர்ந்ததா? என்று புரியாமல் தமிழக மக்கள் தடுமாறுகிறார்கள்.

பிழைப்புவாத பொறுக்கி அரசியல் வியாபாரத்தில் மான- அவமான உணர்ச்சிகளுக்கும் இடம் கிடையாது. கடந்த சட்டமன்றத்தில் கருணாநிதியை அடிக்கப் பாய்ந்த அ.தி.மு.க.வின் ரவுடியான சேகர் பாபு, இப்போது கருணாநிதியின் உடன்பிறப்பாக மாறி தி.மு.க.வேட்பாளராகப் போட்டியிடுகிறார். கற்பு நெறி பேசி நடிகை குஷ்புவுக்கு எதிராகச் சாமியாடிய ராமதாசும் திருமாவும் இன்று அவர் தி.மு.க. பேச்சாளராகிவிட்டதால் பம்முகின்றனர். பா.ம.க. ஒருபுறமிருக்க, ஆதிக்க சாதிக் கவுண்டர்களின் கொங்குநாடு முன்னேற்றக் கழகத்துக்கு 7 இடங்களை தி.மு.க. கூட்டணி ஒதுக்கியிருக்கிறது. அ.தி.மு.க. கூட்டணித் தலைவி ஜெயலலிதா, நடிகர் சரத்குமாரைத் தலைவராகக் கொண்ட நாடார் சாதியினரின் புதிய கட்சிக்கு சில தொகுதிகளை ஒதுக்கியுள்ளார். இலவசக் கவர்ச்சித் திட்டங்களோடு பணபலம், சாதியபலம், குண்டர்பலம் ஆகிய முப்பெரும் ஆயுதங்களே தமிழக ஓட்டுக்கட்சிகளின் தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பவையாக மாறிவிட்டன.

மறுகாலனியாக்க அரசியல் - பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக, நாட்டின் இறையாண்மையும் மக்

தி.மு.க; மற்றும் அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைகள்:
இலவசத் திட்டங்களால் தமிழனைக் கையேந்தியாக்கி கார்ப்பரேட் கொள்ளைக்குக் காவடி தூக்குவதில் போட்டா போட்டி.





களின் வாழ்வுரிமைகளும் சூறையாடப்பட்டு வரும் சூழலில், ஓட்டுச்சீட்டு ஜனநாயகம் என்பதே இந்த அரசமைப்பிற்கு ஒரு கோமாளித் தொப்பியாக மாறி வருவதைத் தமிழகத் தேர்தல் நிகழ்ச்சிப் போக்குகள் நிரூபித்துக் காட்டுகின்றன. கொள்கைகளின் இடத்தைக் கவர்ச்சி - இலவசத் திட்டங்கள் பிடித்துக் கொண்டதைப் போலவே, கட்சிகளைப் பணமுதலைகள் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

தயாநிதியும் ராசாவும் மைய அமைச்சர்களாக்கப் பட்டதற்கும் மு.க.ஸ்டாலின் துணை முதல்வராக்கப் பட்டதற்கும் காரணம் என்ன? வீரபாண்டி ஆறுமுகம் போன்ற தி.மு.க. பழம் பெருச்சாளிகள் தமது வாரிசுகளுக்கு சீட் வாங்கியிருப்பதும், காங்கிரசின் கிருஷ்ணசாமியின் மகன் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்பதும் குடும்பத்தோடு நாட்டுக்குச் சேவை செய்வதற்கா? இதில் புரியாத இரகசியம் ஒன்றுமில்லை. கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது, தி.மு.க.அமைச்சர் எ.வ.வேலுவின் சொத்தும் கரூர் பழனிச்சாமியின் சொத்தும் கோடிக்கணக்கில் அதிகரித்திருக்கிறது. தாங்கள் போட்டியிடுவதன் நோக்கம் என்ன என்பதில் வேட்பாளர்கள் தெளிவாகவே இருக்கிறார்கள்.

எந்தவொரு கட்சியின் தலைவர்களும் பிரமுகர்களும் கொள்கை- இலட்சியத்துக்காக அந்தக் கட்சியில் அங்கம் வகிப்பதில்லை. அதுபோலவே எந்தவொரு கூட்டணியும் பொதுவான கொள்கை - இலட்சியத்தின் அடிப்படையில் உருவாவதுமில்லை. நாற்காலிகளைப் பகிர்ந்து கொள்வதும் கருப்புப் பணம் கைமாறுவதும்தான் கூட்டணிகள் உருவாவதற்கும், வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்குமான அடிப்படை என்பதும்; கோடீசுவரர்கள், சுயநிதிக் கல்லூரி அதிபர்கள், கந்துவட்டி -மணற்கொள்ளை- ரியல் எஸ்டேட் மாபியாக்கள்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்பதும் இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது. கோடீசுவரர்கள் மட்டும்தான் தேர்தலில் வேட்பாளராக நிற்க முடியும் என்ற இந்த நிலைமை, கட்சி என்ற அமைப்பையே இல்லாமல் செய்து விட்டது. தற்போதைய ஓட்டுச்சீட்டு அரசியலுக்குக் கட்சியும் தொண்டர்களும் எந்த விதத்திலும் தேவைப் படவில்லை என்பதே உண்மை.

இன்றைய கார்ப்பரேட் ஜனநாயகத்தில், யாரை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்பது ஓட்டுக் கட்சித் தலைமைகளிடம் இல்லை. ராசாவை அமைச்சராக்க டாடா சிபாரிசு செய்த கதை நாடெங்கும் அம்பலமாகியுள்ளது. அமெரிக்காவின் விசுவாசி மன்மோகன் சிங்கைப் பிரதமராகவும், உலக வங்கி அதிகாரியாக இருந்த மான்டேக் சிங் அலுவாலியாவை நிதியமைச்சராகவும் நியமிக்க வேண்டும் என்று அமெரிக்கா நிர்பந்தித்த கதை வெளிவந்துள்ளது. அமெரிக்காவின் உத்தரவுப்படி மணிசங்கர் அய்யரை நீக்கிவிட்டு பெட்ரோலிய அமைச்சராக முரளி தியோரா அமர்த்தப்படுகிறார். அப்படியானால் ஓட்டுச்சீட்டு ஜனநாயகத்தின் உண்மைப் பொருள்தான் என்ன?

மக்களால் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளும்கட்சியின் அமைச்சரவை அரசின் கொள்கை முடிவுகளை வகுப்பதில்லை. கார்ப்பரேட் முதலாளிகளின் நலனும் விருப்பமுமே கொள்கையாக்கப்படுவதும் அதிகார வர்க்கம் இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவதுமே இப்போதைய நிர்வாக முறையாகிவிட்டது. துறைசார் வல்லுனர்கள் என்ற பெயரில் ஏகாதிபத்திய ஆலோசனை நிறுவனங்கள் பரிந்துரை செய்வதும், நேரடியாகக் கொள்கை வகுத்துத் தருவதும், நீரா ராடியா போன்ற தரகர்களைக் கொண்டு ஒப்பந்தங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொள்வதும், நாடாளுமன்ற நிலைக்குழுக்களில் முதலாளிகள் அங்கம் வகிப்பதுமாக நிர்வாக முறை மாறிவிட்டது. இத்தகைய குழுக்கள் பரிந்துரைத்ததன் அடிப்படையில் ஒப்பந்தம் போடப்பட்டதாகவே நாடாளுமன்றத்திலும் சட்ட மன்றத்திலும் அமைச்சர்கள் பதிலளிக்கின்றனர்.

அமைச்சர்கள் இத்தகைய ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுவதற்கு மேல் ஒன்றும் செய்வதில்லை. நாடாளுமன்ற - சட்டமன்றங்களில் சில நாட்கள் கூச்சல் போடுவதும், தீர்மானங்களை அவசரமாக நிறைவேற்றுவதும்தான் நடக்கிறது. மக்கள் நலனுக்கு எதிரானதாக இருந்தாலும், இத்தகைய கொள்கை முடிவுகளில் தலையிடமுடியாது என்று நீதிமன்றங்கள் ஒதுங்கிக் கொண்டு கார்ப்பரேட் கொள்ளை-ஊழலுக்குச் சேவை செய்கின்றன. சட்டமன்றங்கள், நாடாளுமன்றம் மட்டுமல்ல; உள்ளூராட்சிகளில் கூட உலக வங்கி மற்றும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் எடுபிடிகளாக

சென்னை நகரை ஏகாதிபத்தியங்களின் காலனியாக்கி,
கூவம் ஆற்றோர குடிசைவாழ் மக்கள் கட்டாய வெளியேற்றம்.
(குடிசைகள் இடிக்கப்படுவதற்கு முன்பாக எடுக்கப்பட்ட படம்)



உள்ள தன்னார்வ நிறுவனங்களே திட்டங்களைத் தயாரித்துக் கொடுத்துத் திணிப்பதாகவும், அவற்றின் ஆலோசனைப் படியே உள்ளாட்சிகள் இயங்குமாறும் நிர்வாக முறை மாற்றப்பட்டிருக்கின்றன.

போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ன என்பதை தகவல் அறியும் சட்டத்தின் மூலமாகவும் அறிய முடியாது. இவை அனைத்தும் இரகசியமாக்கப்பட்டுள்ளன. அணுசக்தி ஒப்பந்தம் போல, இது நாட்டின் வளர்ச்சிக்கானது என்று கூறி மறைக்கப்படுகின்றன. குடிமக்களுக்கோ, சட்டமன்ற- நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கோ இவை தெரிய வேண்டியதில்லை என்பதுதான் அரசின் கொள்கையாக உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதாகக் கூறப்படும் நாடாளுமன்றத்திற்கோ, சட்டமன்றத்திற்கோ, உள்ளாட்சி அமைப்புகளுக்கோ கூட இது பற்றிக் கேள்வி கேட்கவும் எவ்வித உரிமையும் இல்லை. ப.சிதம்பரம், அபிசேக் மனு சிங்வி, அருண் ஜேட்லி உள்ளிட்ட பல ஓட்டுக்கட்சி பிரமுகர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் சட்ட ஆலோசகர்களாகவும், வழக்குரைஞர்களாகவும் பணியாற்றுவதோடு, இத்தகைய கார்ப்பரேட் நிறுவனங்களிலும், கான்கிரீட் வீடு கட்டும் திட்டம், மருத்துவக் காப்பீடு போன்ற ஒப்பந்த நிறுவனங்களிலும் ஓட்டுக் கட்சி பிரமுகர்கள் பங்குதாரர்களாக இருந்தும் ஆதாயமடைவதால், அவர்கள் இத்தகைய ஒப்பந்தங்கள் பற்றி வாய் திறப்பதுமில்லை.

ஓட்டுரிமை என்பது ஐந்தாண்டுகளுக்கு என்ன வேண்டுமாலும் செய்து கொள்ளுமாறு அளிக்கப்படும் ஒப்பந்தப் பத்திரமாகிவிட்டது. ஒருமுறை எழுதிக் கொடுத்துவிட்டால் பின்னர் அதை மாற்றவும் முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியை தட்டிக் கேட்கவோ, அவரது பிரதிநிதித்துவத்தை ரத்து செய்யவோ மக்களுக்கு உரிமையும் கிடையாது. மொத்தத்தில் தேர்தல் என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் சடங்காகவும், கார்ப்பரேட் நாயகமே ஜனநாயகமாகவும் மாறிவிட்டது. இவ்வளவுக்குப் பின்னரும் ஓட்டுப் போடுவதால் என்ன பயன்?

வாழ்விழந்த விவசாயிகளும் வேலையிழந்த தொழிலாளர்களும் பல கோடிப் பேராக உள்ள நிலையில், தமிழகத்தின் உயிராதாரமான இப்பிரச்சினைகளுக்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி எந்த ஓட்டுக் கட்சியும் வாய் திறப்பதில்லை. விவசாயம் நசிந்து போனதற்கும், கைத்தறி - விசைத்தறி - சிறு தொழில்களின் அழிவுக்கும், பஞ்சம் பிழைக்க மக்கள் ஊரை விட்டு ஓடும் அவலத்திற்கும் இந்தத் தேர்தலுக்கும் என்ன உறவு? மறுகாலனியாக்கத்துக்கும் விவசாயம் - சிறு தொழில்களின் அழிவுக்கும் என்ன உறவு? இவையனைத்தும் ஓட்டுக்கட்சிகளாலும் செய்தி ஊடகங்களாலும் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. அரசியலற்ற அற்ப விவகாரங்களும் கிசுகிசுக்களும் வதந்திகளும் ஊகங்களுமே அரசியலாக ஊதிப் பெருக்கிக் காட்டப்படுகின்றன.


சென்னை மெட்ரோ ரயில் திட்டம்: ஆளுங்கட்சியின் சாதனையா? கார்ப்பரேட் கொள்ளைக்கான அடிக்கட்டுமானத் துறையின் வளர்ச்சியா?

உள்ளூர் தொழிலுக்கும் விவசாயத்துக்குமான மின்சாரத்தை தி.மு.க. அரசு வெட்டி, தமிழகத்தை இருளில் தள்ளிய போதிலும் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சலுகை விலையில் தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு ஏரி-குளங்கள் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் அவசரச் சட்டம் போட்டு நிலமற்ற விவசாயிகள் குறுகியகால சாகுபடி செய்வதையும் ஊருணிகள், குளங்களில் உள்ளூர் மக்கள் மீன் பிடித்துவந்த பாரம்பரிய உரிமையையும் பறித்துவிட்டது. வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டம், வேளாண் தொழில் ஆலோசகர் ஒழுங்காற்றுச் சட்டம் முதலானவற்றின் மூலம் பாரம்பரிய வேளாண் அறிவையும் தற்சார்பையும் முற்றிலுமாக அழித்து, தமிழக விவசாயிகளைப் பன்னாட்டு நிறுவனங்களின் கொத்தடிமைகளாக்க ஏற்பாடு செய்துள்ளது. பன்னாட்டு கம்பெனிகளின் ஆலோசனைப்படி, மரபணு மாற்றுப் பயிர்கள் கட்டாயமாகத் திணிக்கப்படுகின்றன.

உலகமயமாக்கலுக்கு ஏற்ப சென்னையை நவீன காலனியாக்கி, பன்னாட்டு நிறுவனங்களின் நலன்களைக் காத்திட உலக வங்கி தீட்டித்தந்த திட்டப்படி இரண்டாவது மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு, சென்னையின் மீனவர்களும் குடிசைவாழ் மக்களும் கறிவேப்பிலை போல வீசியெறியப்பட்டனர். உலக வங்கி திட்டப்படி, புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டு நகர்ப்புற சேவைகளைத் தனியார்மயமாக்கும் வேலை செயல்படுத்தப்பட்டது. பெருந்தொழில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எங்கு, எந்த நிலம் எவ்வளவு வேண்டுமோ, அவற்றை அபகரித்துக்

கொடுக்கும் வேலையையும், தமிழ்நாட்டில் அனுமதி பெற்ற 70 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நிலம் பறிக்கும் வேலையையும் சிப்காட் மற்றும் டிட்கோ ஆகிய அரசு நிறுவனங்களே செய்கின்றன.

தி.மு.க.வின் மைய அமைச்சர்களின் ஊழல் கொள்ளைப் பற்றி அடுக்கடுக்காக குற்றம் சாட்டுகிறார் ஜெயலலிதா. கருணாநிதி குடும்பம் தமிழகத்தைக் கொள்ளையடித்த கதையைப் பேசுகிறார். ஆனால், தமிழகத்தை இருளில் தள்ளிவிட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தடையற்ற மின்சாரம் வழங்கும் தி.மு.க. அரசின் அநியாயத்தை எதிர்க்கவில்லை. அரசு தொலைபேசித் துறையை முடமாக்கி டாடா, அம்பானி முதலான தனியார் தொலைபேசி முதலாளிகளைக் கொழுக்க வைத்தவர்தான் 'ஸ்பெக்ட்ரம் புகழ்' ராசா என்று அவர் குற்றம் சாட்டுவதில்லை. டிரிப்ஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் மருந்துகளின் விலையை ஏழைகளுக்கு எட்டாக் கனியாக்கியவர்தான் அன்புமணி என்று சாடுவதில்லை. தமிழகத்தில் இயங்கும் பன்னாட்டு நிறுவனங்களிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் எவ்வித தொழிற்சங்க உரிமையும் இல்லாமல் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருப்பதைப் பற்றி கருணாநிதி அரசின் சர்வாதிகாரப் போக்கிற்கு ஒரு சான்றாகக் கூடக் காட்டுவதில்லை. தி.மு.க. அரசை விஞ்சும் வகையில் அந்நிய முதலீட்டை அதிகரித்து தமிழகத்தை முன்னேற்றப் போவதாக அறிவிக்கிறார், ஜெயா. மறுபுறம், ஜெயலலிதாவின் ஊழல் கொள்ளையைப் பற்றிப் பட்டியல் போடும் தி.மு.க. கூட்டணி, தாமிரவருணி ஆற்றையே கோகோகோலாவிற்குத் தாரை வார்த்த மாபெரும் ஊழலைப் பற்றி வாயே திறப்பதில்லை.

எனில், தி.மு.க. கூட்டணிக்கும் அ.தி.மு.க. கூட்டணிக்கும் என்ன கொள்கை வேறுபாடு? பாதாள சாக்கடைக்கும் கூவம் ஆற்றுக்கும் இடையிலான வேறுபாடுதான் இவர்களுக்கிடையிலான வேறுபாடு.

மக்கள் வரிப்பணத்தை வாரியிறைத்து கார்ப்பரேட் முதலாளிகளின் தேவைக்காகப் போடப்படும் நால்வழி விரைவுச் சாலைகள், மேம்பாலங்கள் முதலான அடிக்கட்டுமானத்துறையின் வளர்ச்சியைக் காட்டி, இதையே தமது ஆட்சியின் சாதனையாக கருணாநிதியும் ஜெயலலிதாவும் பீற்றிக் கொள்கின்றனர். உலக வங்கி, உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைகளையும், அதனடிப்படையில் வகுக்கப்படும் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளையும் இவ்விரு கூட்டணிகளும் உடன்பட்டு வரவேற்கின்றன. தனியார்மய -தாராளமயக் கொள்கைகள் தோல்வியடைந்து பெருத்த பின்னடைவு ஏற்பட்டுள்ள போதிலும், மீண்டும் அதேபாதையில் இக்கொள்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்துவதன் மூலம்தான் தமிழகத்தைத் தொழில் வளமிக்க முதன்மை மாநிலமாக்க முடியும் என்று அவை கூறுகின்றன. இத்தகைய மறுகாலனியாக்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் ஓரணியில் நிற்கும் இக்கூட்டணிக் கட்சிகள், இந்தக் கொள்கைக்கும் அரசியலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாததுபோல் மக்களை ஏய்க்கின்றன. அற்பமான வேற்றுமைகளை ஊதிப் பெருக்கி, அதையே அரசியலாகக் காட்டி மக்களை மயங்க வைத்திருக்கின்றன. இந்த லாவணிக்குப் பக்கமேளம் வாசித்து, நம்பிக்கையிழந்து வெறுத்துப் போன மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையூட்டி, தமிழகச் சட்டமன்றத் தேர்தலையொட்டி செயற்கையாக ஒரு விறுவிறுப்பை உருவாக்கி வாக்காளர்களைக் கவர்ந்திழுக்கக் கிளம்பியுள்ளன முதலாளித்துவ ஊடகங்கள்.

வாக்குரிமையைப் புனிதமான ஜனநாயகக் கடமையாகச் சித்தரிக்கும் ஓட்டுப் பொறுக்கிகள், வாக்குரிமையைப் போலக் கருத்துரிமையையும் போராடும் உரிமையையும் அடிப்படை ஜனநாயக உரிமையாக ஏற்பதில்லை. மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் போராடி வென்றெடுப்பதை ஓட்டுப் பொறுக்கிகள் எவருமே விரும்புவதில்லை. அது அவர்களது முதலுக்கே மோசமாகிவிடும் என்று அஞ்சுகிறார்கள். மக்களுடைய போராட்டங்களை முடமாக்கவும் ஜனநாயக உணர்வுகளை மழுங்கடிக்கவும்தான் அவர்கள் முயற்சிக்கிறார்கள். வெள்ளைக்காரன் ஆட்சியைப் போல இன்றும்கூட பொதுக் கூட்டம் - பேரணி நடத்த போலீசிடம் போய் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. மக்கள் தண்ணீர் கேட்டுப் போராடினால், போராடும் மக்களைச் சந்திக்க அமைச்சர்களோ, எம்.எல்.ஏ.க்களோ, குடிநீர் வாரிய அதிகாரிகளோ வருவதில்லை. போலீசு வருகிறது. வாக்குரிமை என்பது மற்றெல்லா உரிமைகளையும் அடியறுக்கும் ஆயுதமாகவே மாற்றப்பட்டுவிட்டது.

இலவசங்களுக்கும் பணத்துக்கும் விலை போகும் அளவுக்கு, ஓட்டுக்கட்சிகள் தங்களது பிழைப்புவாதத்தை மக்களி

**தேர்வாய் கண்டிகை கிராம மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து பிரான்ஸ் நாட்டு மெக்கலீன் டயர் நிறுவனத்துடன் போடப்படும் ஒப்பந்தம்: கார்ப்பரேட் சேவையே தி.மு.க.வின் 'சாதனை'!**



டமும் பரப்பி அவர்களையும் சாக்கடையில் தள்ளிவருகின்றன. மறுகாலனியாக்கத்தால் சூறையாடப்படும் தங்கள் வாழ்க்கை பற்றியோ, தாங்கள் இழந்துவரும் அடிப்படை உரிமைகள் பற்றியோ எவ்வித விழிப்புணர்வும் இல்லாத மக்களுக்கு ஓட்டுக்கட்சிகள் அறிவிக்கும் இலவசங்கள் மட்டுமே புரியக்கூடியதாக இருக்கிறது. பண்ணையார்களிடம் பொங்கல் இனாம் வாங்கப் போகும் பண்ணையடிமைகளைப் போல, மக்களைத் தங்கள் முன்னால் கையேந்தி நிற்க வைத்திருக்கிறார்கள், இந்த ஓட்டுப் பொறுக்கிகள். இவர்களிடம் கையேந்தி நிற்பதும் இப்படிப்பட்ட தேர்தலில் வாக்களிப்பதும் நம்மை நாமே பிச்சைக்காரர்கள் என்று ஒப்புக் கொள்வதற்குச் சமமானது.

இத்தனைக்கும் பிறகும் தேர்தல் ஆணையத்தின் கெடுபிடிகளைக் காட்டி, அதிகார வர்க்கம் கடுமையாக நடந்து கொண்டால், ஓட்டுக்கட்சிகளின் அராஜகங்களையும் தேர்தல் சீரழிவுகளைத் தடுத்துவிட முடியும் என்றும், மையப் புலனாய்வுத் துறையும் நீதித் துறையும் அரசியல் தலையீடின்றிச் செயல்பட்டால் ஊழல் கொள்ளைகளைத் தடுத்துவிட முடியும் என்றும் படித்த வர்க்கத்தினர் சிலர் நம்புகின்றனர். ஆனால், தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விவரங்களைக் கேட்டு ஊழலையும் கொள்ளையையும் அம்பலப்படுத்த முயற்சிப்பவர்கள் கூட அச்சுறுத்தப்படுவதும், ஏன் கொல்லப்படுவதும் நடக்கும்போது, உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் சிலர் ஊழல் பெருச்சாளிகளாக அம்பலப்பட்டுள்ளபோது, இன்றைய அரசியலமைப்பு முறையே கார்ப்பரேட் முதலாளிகளின் கொள்ளைக்கானதாக இருக்கும் போது, சாக்கடையை அகற்றாமல் கொசுக்களை ஒழித்துவிட முடியாது. இன்னும் சிலர் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்க விரும்பவில்லை என்று 49-ஓ போடச் சொல்கின்றனர். ஓட்டுக் கட்சிகள் மீதான மக்களின் அதிருப்திக்கு இதுவொரு வடிகாலாக இருக்கிறதே தவிர, 49-ஓ போடும் வாக்காளர்களின் எண்ணிக்கை பெரும்பான்மையாக இருந்தாலும்கூட, இது தற்போதைய தனியார்மய - தாராளமயக் கொள்ளைக்கான அரசியலமைப்பு முறையை மாற்றியமைப்பதற்கான ஏற்பாடல்ல.

இந்நிலையில், மின்னணு எந்திரத்தின் பொத்தானை அழுத்திவிட்டு மக்கள் தமது சிந்தனையையும் செயலையும் சிறைப்படுத்திக் கொண்டு இனியும் அதிகாரிகளின் ஓட்டுப் பொறுக்கிகளின் தயவிற்காகக் காத்துக் கிடக்கத்தான் வேண்டுமா? இதற்கு மாறாக, மக்களே தமது சொந்த அரசமைப்பை, ஒரு புதிய உண்மையான மக்கள் ஜனநாயக அரசமைப்பை உருவாக்கிக் கொள்ள முடியாதா? முடியும்; இது சாத்தியமானதுதான் என்பதை ஏற்கெனவே பல நாடுகளின் அனுபவங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.



**பண்ணையார்களிடம் பொங்கல் இனாம் வாங்கப் போகும் பண்ணையடிமைகளைப் போல, மக்களைத் தங்கள் முன்னால் கையேந்தி நிற்க வைத்திருக்கிறார்கள், இந்த ஓட்டுப் பொறுக்கிகள்**

ஒவ்வொரு கிராம - வட்டார அளவிலும் மக்கள் குழுக்கள் நிறுவப்பட்டு, அக்கிராம - வட்டார நிர்வாகிகளைத் தேர்வு செய்வதும், அவர்களே நீதி-நிர்வாகம், காவல் பணிகளை மேற்கொள்வதும், அதே போல நகரங்களில் குடியிருப்புப் பகுதிகள் - தொழிலகங்கள் அடிப்படையில் மக்கள் மன்றங்களையும் நிர்வாக அமைப்புகளையும் நிறுவிக் கொள்வதும் சாத்தியமானதுதான். இவற்றைத்தான் மக்கள் சர்வாதிகார மன்றங்கள், உண்மையான ஜனநாயக அமைப்புகள் என்று கருத முடியும். இவற்றின் மூலம் உள்ளூர் அளவிலும் இவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநில, மைய மன்றங்களும் நிர்வாக அமைப்புகளும் நிறுவிக் கொள்வதும் சாத்தியமானதுதான்.

தேர்தல்களைப் புறக்கணித்துவிட்டு வேறு என்னதான் செய்வது? ஒரு ஆட்சியும் அரசமைப்பும் இல்லாமல் நிர்வாகம் எப்படித்தான் நடக்கும் என்று பலரும் கேள்வி எழுப்புகிறார்கள். வெறுமனே விரக்தியில் தேர்தலைப் புறக்கணிப்பது அல்ல; தற்போதைய ஆட்சி, அரசியலமைப்பு, நிர்வாக முறை அனைத்தையும் ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் மக்கள் சர்வாதிகார அரசமைப்புகளை நிறுவ முடியும்.

இது ஒரு மாபெரும் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் மூலமாகத்தான் சாத்தியமாகும். இத்தகைய மக்கள் சர்வாதிகார அரசமைப்பை நாளையே நிறுவிவிட முடியாது என்பது உண்மைதான். இருப்பினும், அதற்கான கருத்துருவாக்கம் முதற்பணி என்ற முறையில்தான் தேர்தலைப் புறக்கணிக்கும் இயக்கத்தின் ஊடாக மக்களை அணிதிரட்ட வேண்டியுள்ளது. இந்த அடிப்படையில்தான் ''போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!'', ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்ற அறிவியல்பூர்வமான அரசியல் முழக்கமும் இயக்கமும் இன்றைய அவசியமாகியுள்ளது. கார்ப்பரேட் கொள்ளையர்களால் இழிந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டு, ஓட்டுப் பொறுக்கிகளின் இலவசத் திட்டங்களுக்குக் கையேந்தும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்கள், அரசியல் அறிவைப் பெறுவதற்கும், மக்கள் ஜனநாயக அரசமைப்பு முறை பற்றிய புரிதலைப் பெறுவதற்கும் புரட்சியாளர்கள் இன்னும் கடுமையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது.

● பாலன்

# “ஸ்பெக்ட்ரம் என்பது வெறும் ஊழல் இல்லை; இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை!”

## – கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சார இயக்கம்.

‘‘ஸ்பெக்ட்ரம் என்பது வெறும் ஊழல் மட்டுமில்லை, இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை! தனியார்மயமே இதன் ஆணிவேர்! இதனைத் தகர்க்க நக்சல்பாரியாய் ஒன்று சேர்! கார்ப்பரேட் கொள்ளையர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்! ஊழல் சொத்துக்களைப் பறித்தெடுத்து மக்களுக்குப் பங்கிடுவோம்!’’, ‘‘இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கான ஜனநாயகம்! ஓட்டுப்போடாதே! புரட்சி செய்!’’ என்ற முழக்கத்துடன் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து கடந்த ஜனவரியிலிருந்து கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகச் சூறாவளிப் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன. கடந்த பிப்ரவரி இறுதியிலிருந்து மார்ச் இறுதி வரையிலான ஒரு மாத காலத்தில் நாளொன்றுக்கு ஒரு பொதுக்கூட்டம் என்ற அளவில் தமிழகமெங்கும் 30-க்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களைத் தொடர்ச்சியாக இவ்வமைப்புகள் நடத்தியுள்ளன.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை அம்பலமாகியுள்ள நிலையில், தனியார்மயத்தையும் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தையும் ஒழிக்காமல் ஊழலை ஒழிப்பதாகப் பேசுவது பித்தலாட்டம் என்பதையும், எந்த ஊழல் கூட்டணி நம்மைக் கொள்ளையிடுவது என்பதற்கு நாமே லைசென்சு கொடுப்பதுதான் தேர்தல் என்பதை உணர்த்தியும்; யார் எந்தத் துறையில் அமைச்சராக்கப்படவேண்டும் என்பதை கார்ப்பரேட் முதலாளிகள்தான் தீர்மானிக்கிறார் என்றால், இந்திய நாடாளுமன்ற - சட்டமன்றத்தின் இயக்கத்தை கார்ப்பரேட் முதலாளிகள்தான் தீர்மானிக்கிறார்கள் என்றால், எதற்காக நாம் வாக்களிக்க வேண்டும், தேர்தல்களைப் புறக்கணித்து இத்தகைய அரசியலமைப்பு முறையை வீழ்த்தி நமக்கான அரசமைக்க நாம் வீதியில் இறங்கிப் போராட வேண்டும் என்று அறைகூவியும் இப்பிரச்சார இயக்கம் வீச்சாக நடைபெற்றது.

ஓட்டுக்கட்சிகளைப் போல எந்தவொரு தொழில் அதிபரையோ, கருப்புப் பண புரவலரையோ சார்ந்திராமல், உழைக்கும் மக்கள் அளித்த நன்கொடைகளைக் கொண்டே இப்புரட்சிகர அமைப்புகள் இப்பிரச்சார இயக்கத்தை நடத்தியுள்ளன. கார்ப்பரேட் ஊழல் கொள்ளைக்கு எதிரான தமது வெறுப்பையும் ஆத்திரத்தையும் வெளிப்படுத்திய உழைக்கும் மக்கள், இப்பிரச்சார இயக்கத்தை உற்சாகத்துடன் வரவேற்றுத் தாராள நன்கொடைகள் அளித்து ஆதரித்ததால், திட்டமிட்டிருந்த தெருமுனைக் கூட்டங்கள் பல பகுதிகளில் பொதுக்கூட்டங்களாக மாற்றப்பட்டன. ஓட்டுக்கட்சிகளை விஞ்சும் அளவுக்கு இப்புரட்சிகர அமைப்புகளின் கூட்டங்களில் உழைக்கும் மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர். பல இடங்களில் ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி தொடங்கியதும் சாலையின் இருமருங்கிலும் கூட்டம் அலைமோதியது. எந்தவொரு ஓட்டுக்கட்சியின் பிரபல மேடைப் பேச்சாளரும் இந்த அளவுக்கு ஆதாரங்களையும் புள்ளிவிவரங்களையும் தொகுத்துப் பேசியதில்லை என்று மக்கள் பாராட்டினர். இப்பொதுக்கூட்டம் குறித்து குறிப்பெடுக்க வந்த உளவுத்துறை போலீசே தன்னிலை மறந்து மக்களோடு சேர்ந்து கைதட்டி வரவேற்கும் அளவுக்கு பேச்சாளர்களின் சிறப்புரை அமைந்திருந்தது.




திருச்சியில்...

பல பகுதிகளில் பேருந்துகளில் பிரச்சாரம் செய்தபோது ஊழலை ஒழிக்கவே முடியாது என்று விதண்டாவாதம் செய்தவர்களை பொதுமக்களே கேள்வி கேட்டு வாயடைத்தனர். சேலத்தில் தோழர்கள் பிரச்சாரம் செய்தபோது ஒரு கீழ்நிலை போலீசுக்காரர், என்னால் உங்களுக்கு நன்கொடை அளிக்க இயலவில்லை; என்னிடமுள்ள துப்பாக்கியை வேண்டுமானால் எடுத்துக் கொண்டு ஊழல் கொள்ளையர்களைச் சுட்டுத் தள்ளுங்கள்; நீங்கள்தான் உண்மையான நக்சல்பாரிகள் என்று இப்பிரச்சார இயக்கத்தின் நோக்கத்தை உணர்ந்து ஊக்கப்படுத்தினார்.

திருச்சி ஈ.வெ.ரா. கல்லூரி, சட்டக் கல்லூரி வாயில்களில் 2.3.2011 அன்று காலை முதல் மாலை வரை கார்ப்பரேட் கொள்ளைக்கும் தனியார்மய-தாராளமயத்துக்கும் எதிராகக் கல்லூரி மாணவர்களிடம் கையெழுத்து இயக்கத்தை பு.மா.இ.மு. நடத்தியது. பெரிய தட்டியில் ஊழல் கொள்ளைக்கு எதிரான தங்களது கருத்துக்களைச் சுதந்திரமாகப் பதிவு செய்வதாக அமைந்த இந்த இயக்கம், மாண வர்களிடம் விழிப்புணர்வூட்டும் சிறப்பானதொரு பிரச்சாரமாக அமைந்தது.


செங்குன்றத்தில்...

கொள்கை வேறு, தனிப்பட்ட வாழ்க்கை வேறு என்ற ஓட்டுப் பொறுக்கி பிழைப்புவாதிகளின் பண்பாட்டுக்கு எதிரான கலகமாக, போராட்டமே வாழ்க்கையாகக் கொண்டுள்ள பு.ஜ.தொ.மு.வின் முன்னணித் தோழரான அருள்தாசின் திருமணம், திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றத்தில் நடந்த பொதுக்கூட்ட மேடையிலேயே நடந்தது. சாதி-மதச் சடங்குகளையும் பெண்ணடிமைத்தனத்தின் அடையாளமான தாலியையும் புறக்கணித்து பொதுமக்களின் முன்பாகப் பொதுக்கூட்ட மேடையில் நடந்த தோழர் அருள்தாஸ் -கவிதாவின் இப்புரட்சிகரத் திருமணம், கம்யூனிஸ்டுகளுக்கு வாழ்க்கை ஒரு திறந்த புத்தகமாக இருப்பதை நிரூபித்துக் காட்டியது.

கடந்த மார்ச் மாதத்தில் கோவில்பட்டி, விழுப்புரம், திருவாரூர், ஓமலூர், உடுமலை, பள்ளிப்பாளையம், மதுராந்தகம், விழுப்புரம்-காணை, பென்னாகரம், செங்குன்றம், சென்னை-டிரஸ்ட்புரம், மதுரை, பரமக்குடி, பட்டுக்கோட்டை, சீர்காழி, நாமக்கல், கரூர் ஆகிய இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. இவை தவிர -ற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், பு.ஜ.தொ.மு. மாநில அமைப்புச் செயலர் தோழர் வெற்றிவேல் செழியன், கோவை ம.க. இ.க. செயலர் தோழர் மணிவண்ணன், சிவகங்கை பு.ஜ.தொ.மு. தோழர் நாகராசன், விருத்தாசம் வி.வி.மு. தோழர் ஜெயகாந்த் சிங், ம.க.இ.க. தோழர் துரை.சண்முகம், கோவை மண்டல பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் விளவை. ராமசாமி, கம்பம் வி.வி.மு. தோழர் மோகன், சென்னை பு.மா.இ.மு. தோழர் கணேசன், மதுரை ம.உ.பா.மையத்தின் இணைச்செயலரும் வழக்குரைஞருமான தோழர் வாஞ்சிநாதன், பெங்களூரு உயர்நீதி மன்ற வழக்குரைஞர் தோழர் பாலன் ஆகியோர் இப்பொதுக்கூட்டங்களில் சிறப்புரையாற்றியுள்ளனர்.

கோவை மற்றும் சில இடங்களில் பொதுக்கூட்டம் நடத்த போலீசு அனுமதி மறுத்தது. இன்னும் சில இடங்களில் ஒலிபெருக்கி பயன்படுத்த தடை விதித்தது. பொதுக்கூட்டத்தை அறிவித்துச் சுவரொட்டி ஒட்டவும் தடை விதித்தது. கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிரான சுவரெழுத்துக்கள் அழிக்கப்பட்டன. இத்தனை இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் இவ்வமைப்புகளின் தோழர்கள் துவளாமல் இப்பிரச்சார இயக்கத்தை வீச்சாக நடத்தியுள்ளனர்.

தேர்தல் பாதையைப் புறக்கணித்து, கார்ப்பரேட் முதலாளிகளின் சொத்துக்களைப் பறித்தெடுப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற போராட்டவிதை இப்புரட்சிகர அமைப்புகளால் உழைக்கும் மக்களின் நெஞ்சங்களில் ஆழமாக ஊன்றப்பட்டுள்ளது. அது வளர்ந்து, தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் எனும் மறுகாலனியாக்கத்துக்கு எதிரான உழைக்கும் மக்களின் புரட்சிப் புயலாகச் சுழன்றடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.


ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் கலைநிகழ்ச்சி.

-பு.ஜ.செய்தியாளர்கள்

## லிபியா மீதான ஆக்கிரமிப்புப் போர்:

# அமெரிக்கப் பயங்கரவாதத்தின் நீட்டிப்பு

**லிபியாவின் கச்சா எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதுதான் அமெரிக்காவின் நோக்கம்.**

ஆப்கான், ஈராக்கையடுத்து, அமெரிக்கா தனது ஆக்கிரமிப்புப் போரை லிபியா மீது தொடுத்திருக்கிறது. நேடோ கூட்டணியைச் சேர்ந்த பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய மூன்று ஏகாதிபத்திய நாடுகளும் அமெரிக்காவுக்கு இணையான வெறியோடு இப்போரில் இறங்கியுள்ளன. லிபியாவின் இராணுவ பலத்தை முற்றிலுமாகச் சிதைத்துவிடும் நோக்கில், அதன் இராணுவ, கப்பற்படைத் தளங்கள், போர் விமானங்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகள் உள்ளிட்ட நவீன ஆயுதங்கள் அனைத்தும் குறிவைத்துத் தாக்கி அழிக்கப்படுகின்றன. இப்போரினூடேயே லிபியாவின் அதிபர் மும்மர் கடாஃபியைக் கொன்றுவிடும் நோக்கமும் மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்கு இருப்பதை, அவரது மாளிகை மீது நடத்தப்பட்ட தாக்குதல் காட்டிக் கொடுத்துவிட்டது.

ஆப்கான் மீதான ஆக்கிரமிப்புப் போர் தாலிபானையும், அல்-காய்தாவையும் அழிப்பது என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்டதைப் போல, ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போர் சதாம் இரகசியமாகப் பதுக்கி வைத்துள்ள பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தேடி அழிப்பது என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்டதைப் போல, லிபியா மீதான ஆக்கிரமிப்புப் போரை ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடி வரும் அந்நாட்டு மக்களைக் காப்பது என்ற பெயரில் அமெரிக்காவும், ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளும் நியாயப்படுத்தி வருகின்றன. ஆனாலும், லிபியாவில் கிடைக்கும் மிகவும் தரம்வாய்ந்த கச்சா எண்ணெய் வளத்தைக் கைப்பற்றிக் கொள்ளவே அமெரிக்கா, ஐ.நா.வின் ஆதரவோடு இப்போரில் குதித்திருக்கிறது என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது.




வட ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள லிபியா இரண்டாம் உலகப் போர் சமயத்தில் இத்தாலியின் காலனியாக இருந்தது. 1951-இல் பெயரளவிலான சுதந்திரம் அடைந்த நாடாக மாறியபொழுது, லிபியாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வரும் செனுஸி என்ற இனக்குழுவைச் சேர்ந்த முதலாம் இத்ரிஸ் என்பவர் தலைமையில் மன்னராட்சியும் உருவாக்கப்பட்டது. கடாஃபா என்ற இனக்குழுவைச் சேர்ந்த மும்மர் கடாஃபி, மக்ரஹா, வர்ஃபல்லா என்ற இனக் குழுக்களோடு இணைந்து 1969-இல் முதலாம் இத்ரிஸின் ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு, லிபியாவின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினார். இந்த அதிகார மாற்றத்தின் பின், லிபியாவின் கச்சா எண்ணெய் வளம் தேசியமயமாக்கப்பட்டது.

எகிப்தின் முன்னாள் அதிபர் நாசர் உருவாக்கிய அகண்ட அரேபியா என்ற அரபு தேசிய சித்தாந்தத்தின் அடிப்படையிலும், (முன்னாள்) சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் தயவிலும் மேற்குலக ஏகாதிபத்தியங்களை எதிர்த்து வந்த கடாஃபி, மேற்காசியா நாடுகளில் இருந்து கம்யூனிசத்தை ஒழித்துக் கட்டுவதையும் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார். கடாஃபியின் ஆட்சியின் கீழ் லிபியா, மற்ற ஆப்பிரிக்க நாடுகளைக் காட்டிலும் பொருளாதாரத்திலும், மனித வள மேம்பாட்டிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியிருந்தாலும், கடாஃபியின் ஆட்சி என்பது மேற்காசியாவின் மற்ற சர்வாதிகார ஆட்சிகளிலிருந்து எவ்விதத்திலும் வேறுபட்டதாக இல்லை. இரகசிய போலீசு அமைப்புகள், இராணுவம், இனக் குழுக்களின் தலைவர்களைக் கொண்ட கவுன்சில் - இவைதான் அவரது ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும் தூண்களாக உருவாக்கப்பட்டன.

சோவியத் சமூக ஏகாதிபத்தியம் வீழ்ந்த பின், கடாஃபியின் மேற்

குலக ஏகாதிபத்திய எதிர்ப்புச் சவடால்கள் ஆட்டங்கண்டு போயின. அமெரிக்கா, ஈராக்கின் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்த பின், கடாஃபியின் மேற்குலக ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது முற்றிலும் பழங்கதையாகிப் போனது.

2003-இல் தனது அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தது, லிபியா. இதன் பிரதிபலனாக, அமெரிக்காவால் ''ரவுடி நாடாக''க் (Rouge State) கருதப்பட்ட லிபியா, அமெரிக்காவின் நட்பு நாடாகியது. மேற்குலக ஏகாதிபத்தியங்கள் லிபியாவின் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையுத்தரவுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டதோடு, லிபியாவிற்குத் தேவைப்படும் நவீன, கனரக ஆயுதங்களைத் தருவதாகவும் உடன்பாடு செய்துகொண்டன. சர்வதேச நாணய நிதியம்கூட வியந்து பாராட்டும்படி தனியார்மயத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கினார், கடாஃபி. எல்லாவற்றுக்கும் மேலாக, அமெரிக்காவின் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் நம்பத்தகுந்த கூட்டாளியாகவும் விளங்கினார், கடாஃபி. குறிப்பாக, அமெரிக்காவால் கைது செய்யப்படும் 'தீவிரவாதிகளை' இரகசியமாக அடைத்து வைத்துச் சித்திரவதை செய்வதற்குத் தனது நாட்டின் சிறைச்சாலைகளைத் திறந்துவிட்டார், கடாஃபி.



லிபியாவின் அதிபர் மும்மர் கடாஃபி.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, கடாஃபியின் சர்வாதிகார ஆட்சியோடு சமாதான சகவாழ்வு நடத்தி வந்த அமெரிக்கா, இப்பொழுது அவரை அகற்றிவிட அந்நாட்டின் மீது ஒரு போரையே ஏவிவிட்டிருப்பது, விளங்கிக் கொள்ள முடியாத புதிரல்ல. ரவுடிகளை வளர்த்துவிடும் போலீசு, பின்பு அவர்களை என்கௌண்டரில் போட்டுத் தள்ளுவது போன்றதுதான் இதுவும்.

தனது மேலாதிக்க நலன்களுக்காக சர்வாதிகாரிகளை அரவணைத்து வளர்த்து விடுவதும், அதே மேலாதிக்க நலன்களுக்காக அச்சர்வாதிகாரிகளைப் பதவியிலிருந்து தூக்கியெறிவது தொடங்கி பரலோகத்திற்கு அனுப்பி வைப்பது வரை அரசியல் சதுரங்க விளையாட்டுக்களை நடத்துவது அமெரிக்காவின் வாடிக்கை. மக்களிடம் அம்பலப்பட்டுப் போன சர்வாதிகாரியின் இடத்தில், தனக்கு விசுவாசமான வேறொரு கும்பலைப் பதவியில் அமர்த்தும் வாய்ப்பு இருந்தால், தனக்கு மிகவும் விசுவாசமாக இருந்தவர் என்றுகூடப் பார்க்காமல் அமெரிக்கா அச்சர்வாதிகாரிகளைப் பதவியில் இருந்து அப்புறப்படுத்திவிடும் என்பதற்கு எகிப்தின் முபாரக்கையும், சிலியின் பினோசெட்டையும் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். அதேபொழுதில், ஈராக்கின் சதாம் உசேனைத் தூக்கிலிட்டும், பாகிஸ்தானின் ஜியா உல் ஹக்கைக் குண்டு வைத்தும் கொலை செய்தது, அமெரிக்கா. அந்த விளையாட்டின் வரிசையில் இப்பொழுது கடாஃபியும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜூனியர் ஜார்ஜ் புஷ் அமெரிக்க அதிபராக இருந்தபொழுது உருவாக்கப்பட்ட புதிய அமெரிக்க -ற்றாண்டுக்கான திட்டத்தின்படி, வளைகுடாப் பிராந்தியத்தின் பாதுகாப்பில் நிரந்தரமான பாத்திரத்தை ஆற்ற வேண்டும் என அமெரிக்கா கருதுகிறது. லிபியா, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளை அடக்கி வைக்க வேண்டும் என்றவொரு ஆலோசனையையும் இத்திட்டம் முன்வைத்துள்ளது. முன்பு ஈராக் மீதும் தற்பொழுது லிபியா மீதும் தொடுக்கப்பட்டுள்ள இந்த ஆக்கிரமிப்புப் போர்களை இந்தப் பின்னணியில் இருந்துதான் பார்க்க வேண்டும்.

•••

எகிப்திலும், துனிசியாவிலும் மாபெரும் மக்கள் எழுச்சி எழுவதற்கு, அந்நாடுகளில் நடைபெற்று வந்த

பாலஸ்தீனப் பகுதிகளில் யூதர்கள் குடியேற்றப்படுவதைத் தடுக்கக்கோரி, ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைத் தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தித் தோற்கடித்த அமெரிக்காவைக் கண்டித்து, மேற்குக்கரையிலுள்ள ரமல்லா நகரில் பாலஸ்தீன மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



பாசிச சர்வாதிகார ஆட்சி மட்டுமின்றி, தனியார் மயம் - தாராளமயம் உருவாக்கிய வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளும் பின்புலமாக இருந்தன. ஆனால், லிபியாவிலோ கடாஃபி யால் ஆட்சி அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப் பட்ட செனுஸி இனக்குழுவைச் சேர்ந்தவர் களும், 1969-இல் கடாஃபியோடு இணைந்து அதிரடிப் புரட்சியை நடத்திய அரபு தேசியவாத குழுவைச் சேர்ந்தவர்களும், கடாஃபியால் 1996-இல் கொடூரமாகக் கொல்லப்பட்ட இசுலாமிய வாதிகளின் வழிவந்தவர்களும், அவர்களின் உற வினர்களும்தான் தற்பொழுது கலகத்தில் இறங் கியுள்ளனர். இக்கலகத்தை வர்ஃபல்லா இனக் குழு தலைவர்களும் ஆதரிக்கின்றனர்.




கடாஃபியைப் பதவியில் இருந்து தூக்கி யெறிந்துவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர, வேறெந்த எந்த அரசியல் நோக்கமும் இக்கலகக்காரர்களுக்குக் கிடை யாது. கடாஃபியைவிட, செனுஸி இனக்குழுவைச் சேர்ந்த தலைவர்கள் மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்பது ஏற்கெனவே வர லாற்றுரீதியாக நிரூபணமாகியிருப்பதால்தான், அக்கல கத்திற்கு அமெரிக்கா ஆதரவு அளிப்பதோடு, இந்த அதி காரப் போட்டியை ஜனநாயகப் போராட்டமாகவும் திரித்துச் சித்தரிக்கிறது.

கடந்த பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் இந்த அதிகாரப் போட்டி தொடங்கியவுடனேயே, கல கக்காரர்களுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கு ஏகா திபத்திய நாடுகளைச் சேர்ந்த உளவுப் பிரிவு அதிகாரி கள் லிபியாவின் கிழக்குப் பகுதியில் நுழைந்தனர். கலகக்காரர்களுக்குத் தேவைப்படும் ஆயுதங்கள் லிபி யாவின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள எகிப்தின் வழியாகக் கடத்தப்பட்டன. கடாஃபியின் தலைமை யில் அமைந்துள்ள அரசைப் பலவீனமாக்கும் வண் ணம், ஏகாதிபத்திய வங்கிகளில் முதலீடு செய்யப்பட் டிருந்த லிபியாவின் சேமிப்புகள் முடக்கப்பட்டன. அதிபர் கடாஃபியும், அவரது உறவினர்களும் வெளி நாடுகளுக்குச் செல்வது தடை செய்யப்பட்டதோடு, அந்நாட்டிற்கு ஆயுதம் விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டது. மேலும், சொந்த நாட்டு மக்களையே கொலை செய்கிறார் என்ற காரணத்தை முன்வைத்து, கடாஃபியை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கும் தீர் மானத்தையும் ஐ.நா.வின் மூலம் ஏகாதிபத்தியங்கள் நிறைவேற்றின.

இவ்வளவுக்குப் பிறகும், கலகக்காரர்களால் லிபி யாவின் கச்சா எண்ணெய் வளம் நிறைந்த பென்காசி நகர் அமைந்துள்ள பகுதியைத் தமது கட்டுப்பாட் டிற்குள் கொண்டுவர முடியவில்லை. இதனையடுத்து தான், லிபியாவின் வான்வழியில் விமானங்கள் பறப்ப தற்குத் தடை விதிக்கும் முடிவை ஏகாதிபத்தியங்கள் எடுத்தன. அம்முடிவை அவர்களே முன்வைத்தால் தமது குட்டு அம்பலமாகிவிடும் என்பதற் காக, அரபுக் கூட்டமைப்பின் வாயிலாக அத் தீர்மானத்தை ஐ.நா.மன்றத்தில் முன் மொழியச் செய்தனர். அத்தீர்மானத்திலுள்ள ''இம்முடிவை எந்த வழியிலும் நடை முறைப்படுத்துவதற்கு உறுப்பு நாடுகளுக்கு அதிகாரம் உண்டு'' என்ற வாசகத்தைப் பயன் படுத்திக் கொண்டு, அத்தீர்மானம் ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலில் நிறை வேற்றப்பட்ட மறுநாளே லிபியா மீது அமெ ரிக்காவும் நேடோ கூட்டணி நாடுகளும் இணைந்து வான்வழி மற்றும் கடல் வழித் தாக்குதல்களைத் தொடுத்தன.

பென்காசி நகருக்கு அருகே, நேடோ கூட்டணி நடத்திய வான்வழித் தாக்குதலில் சேதமடைந்து போன பீரங்கியின் மேல் ஏறி நின்று கொண்டு, தமது வெற்றியைக் கொண்டாடும் கடாஃபி எதிர்ப்பாளர்கள்



• • •

ஈழத் தமிழர்களை இனப் படு கொலை செய்த ராஜபக்சே கும்பலோடு தோளோடு தோள் உரசிக் கொண்டு நிற்கும்

மேற்குலக ஏகாதிபத்திய அரசுகள், லிபியா மீது பொருளாதாரத் தடையை விதிக்கின்றன. சொந்த நாட்டு மக்களை -ற்றுக்கணக்கில் கொன்று குவிக்கும் கடாஃபியைக் குற்றவாளியாக அறிவித்து, சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கும் ஐ.நா. மன்றமும், அதன் உறுப்பு நாடுகளும், ஈராக்கிலும், ஆப்கானிலும் அமெரிக்காவும் நேடோ கூட்டணி நாடுகளும் நிராயுதபாணியான அப்பாவி மக்களைப் பத்தாயிரக்கணக்கில் கொன்று குவித்து வருவதை வேடிக்கை பார்த்து வருகின்றன. இசுரேல் காசா முனையில் நடத்திய போர்க் குற்றங்கள் பற்றிய உண்மை அறிக்கையை ஐ.நா. மன்றத்தில் முன்வைக்கப்படுவதைத் தனது ரத்து அதிகாரம் மூலம் தடுத்து நிறுத்திய அமெரிக்கா, கடாஃபியின் கொலைக் குற்றங்கள் பற்றி முதலைக் கண்ணீர் வடிக்கிறது.



பஹ்ரைனில் மன்னராட்சிக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தின் பொழுது போலீசார் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்தவர் மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்படுகிறார்.

கடாஃபி கலகக்காரர்கள் மீது நடத்தும் தாக்குதலைப் போர்க் குற்றமாகக் குற்றஞ்சுமத்தும் அமெரிக்கா, பஹ்ரைனில் மன்னராட்சிக்கு எதிராகப் போராடுபவர்களை ஒடுக்க சவுதி அரேபியாவின் இராணுவமும் ஐக்கிய அரபு நாடுகளின் போலீசு பட்டாளமும் இறங்கியிருப்பதைக் கண்டு கொள்ளவில்லை. பஹ்ரைனில் மன்னராட்சிக்கு எதிராகப் போராடி வரும் எதிர்க்கட்சித் தலைமையான இசுலாமிய சமூகக் கட்சி மீது அமெரிக்காவிற்கு நம்பிக்கையில்லை. அக்கட்சி ஆட்சியைப் பிடித்தால் பஹ்ரைனில் உள்ள தனது கப்பற்படைத் தளத்தைக் காலி செய்யச் சொல்லி உத்தரவிடலாம் என சந்தேகிக்கிறது, அமெரிக்கா. பஹ்ரைனில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அதன் எதிரொலி மன்னராட்சி நடக்கும் சவுதி அரேபியாவிலும் கேட்கும் என்றும் அஞ்சுகிறது. அதனால்தான், பஹ்ரைனில் மன்னராட்சியைத் தாங்கிப் பிடித்து வருகிறது, அமெரிக்கா. மேலும், பஹ்ரைனில் ஜனநாயக உரிமைகளுக்காக நடக்கும் போராட்டத்தை ஷியா - சன்னி மோதலாக மாற்றும் சதியிலும் ஆளும் கும்பல் இறங்கியிருக்கிறது.

லிபியா மீதான போர், ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றியெல்லாம் கூப்பாடு போட்டு வரும் அமெரிக்காவின் கபடத்தனத்தையும், இரட்டை வேடத்தையும் மீண்டுமொருமுறை அம்பலப்படுத்திவிட்டது. குறிப்பாக, கருப்பர் இனத்தைச் சேர்ந்த பாரக் ஒபாமா அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பின், அதன் மேலாதிக்கக் கொள்கையே தலைகீழாக மாறிவிடும் எனக் கூறி, அவருக்கு ஒளிவட்டம் போட்டுக் காட்டப்பட்டது. ஆனால், ஒபாமா ''புஸ்ஸ்லாகிவிட்டார்'' என்பதைத்தான் லிபியப் போரும், ஆப்கானிலும், ஈராக்கிலும் நடந்து வரும் படுகொலைகளும் பச்சையாக எடுத்துக் காட்டுகின்றன. அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியையும், உள்நாட்டில் சரிந்து விழுந்துவிட்ட தனது செல்வாக்கையும் இத்தகைய போர்வெறி பிடித்த மேலாதிக்க நடவடிக்கைகளின் மூலம்தான் ஈடுகட்டப் பார்க்கிறார், ஒபாமா.

லிபியா மீதான ஐ.நா.வின் தீர்மானம் பாதுகாப்பு கவுன்சிலில் ஓட்டுக்குவிடப்பட்டபொழுது, ரசியா, சீனா, இந்தியா உள்ளிட்ட ஐந்து நாடுகள் ஓட்டுப் போடாமல் ஒதுங்கிக் கொண்டன. இதனைக் காட்டியே, இந்தப் போரை தாங்கள் எதிர்ப்பதாக இந்நாடுகள் கூறிவருகின்றன. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் ரசியாவும், சீனாவும் தமது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தீர்மானத்தை முறியடிக்காமல், ஓட்டுப் போடாமல் ஒதுங்கிக் கொண்டது அந்நாடுகளின் சந்தர்ப்பவாதப் போக்கைத்தான் காட்டுகின்றன. இப்போருக்கு அந்நாடுகள் தெரிவிக்கும் எதிர்ப்பு முனை மழுங்கிப் போன ஒன்றாகும்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தற்காலிக உறுப்பினராக உள்ள இந்தியா, ஓட்டுப் போடாமல் ஒதுங்கிக் கொண்டாலும், அதன் அமெரிக்க அடிவருடித்தனத்தை மறைத்துவிட முடியாது. அமெரிக்கா, ஆப்கானில் நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போரின் இரத்தக் கறைகள் இந்தியாவின் கைகளிலும் படிந்துள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

சாவேஸ், பிடல் காஸ்ட்ரோ உள்ளிட்ட சில தென் அமெரிக்க நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்க்கும் அதே சமயம், கடாஃபியை ஆதரிக்க வேண்டும் எனக் கூறி வருகின்றனர். கடாஃபியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது சந்தர்ப்பவாதமானது என்பது ஏற்கெனவே நிரூபணமாகிவிட்டது. கடாஃபி இத்தருணத்தில் மேற்குலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கிறார் என்பதற்காக அவரது சர்வாதிகார ஆட்சிக்கு அரணாக நிற்க முடியாது. தங்க ஊசி என்பதற்காகக் கண்ணைக் குத்திக் கொள்ளவா முடியும்? அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரையும், கடாஃபியின் சர்வாதிகார ஆட்சியையும் எதிர்த்துப் போராடுவது மட்டுமே முரணற்ற ஜனநாயகமாக இருக்க முடியும்.

● திப்பு

தேர்வாய் கண்டிகை - காகரப்பள்ளி:

# அரசின் நிலப்பறிப்புக்கு எதிராக ஆர்த்தெழுந்த உழைக்கும் மக்கள்!

## கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சேவை செய்ய மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் கயவாளிகளின் கூடாரம்தான் மத்திய–மாநில அரசுகள்.

**பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் கொள்ளைக்காக, உழைக்கும் மக்கள் அடுத்தடுத்து அவர்களது சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்படும் கொடூரம் நாடெங்கும் தீவிரமாகிவருகிறது. மே.வங்கத்தின் நந்திகிராமம், சிங்கூர் , ஒரிசாவின் கலிங்கா நகர், சட்டிஸ்கரின் தண்டேவாடா, மகாராஷ்டிராவின் ஜெய்தாபூர் மட்டுமல்ல; தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள தேர்வாய் கண்டிகை கிராமத்திலும், ஆந்திராவின் சிறீகாகுளம் மாவட்டத்திலுள்ள காகரப்பள்ளி கிராமத்திலும் நிலப்பறிப்புக்கு எதிராகவும் தமது வாழ்வுரிமைக்காகவும் உழைக்கும் மக்கள் நடத்திவரும் போராட்டங்கள் இந்த உண்மையை மெய்ப்பித்துக் காட்டுகின்றன.**

கடந்த பிப்ரவரி 28 அன்று ஆந்திராவின் சிறீகாகுளம் மாவட்டம், சாந்த பொம்மலி வட்டத்திலுள்ள காகரப்பள்ளியில் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எர்ரய்யா, கிரி ராஜேஸ்வர ராவ் எனுமிரு விவசாயிகள் மாண்டு போயுள்ளனர். படுகாயமடைந்த 5 பேர் மரணப் படுக்கையில் கிடக்க, 50-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நிலப்பறிப்புக்கு எதிராகவும் தமது வாழ்வுரிமைக்காகவும் போராடியதுதான் காகரப்பள்ளி மக்கள் செய்த குற்றம்!

காகரபள்ளி வட்டாரம் நீர்க்குட்டைகளும் புதர்களும் இயற்கையாக அமைந்த சதுப்பு நிலப்பகுதியாகும். இங்கு வளர்ந்து நிற்கும் கோரைப் புற்கள் வேண்டாத கழிவுகளை உறிஞ்சிக் கொண்டு நல்ல நீரை அப்படியே அரணாகப் பாதுகாப்பதால் இயற்கையின் கொடையாக இப்பகுதி கருதப்படுகிறது. பறவைகள் இக்கோரைகளின் நடுவில்தான் கூடுகட்டி வாழும். வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் வடிகாலாக இருப்பது இந்தச் சதுப்பு நிலம்தான். உள்ளான், வாத்து, குருவி, கொக்கு, நாரை, நீர்க்கோழிகள் எனப் பல அரியவகை பறவையினங்கள் வாழும் பகுதியாகவும், பல வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கிச் செல்லும் பகுதியாகவும், பல வகையான மீன்கள், ஆமைகள், பாம்புகள், தவளைகள், பட்டாம் பூச்சிகள் என வளமான பல்லுயிர் சூழ்ந்த பகுதியாகவும் காகரப்பள்ளி வட்டாரம் விளங்குகிறது. தெலிநீலபுரம் பறவைகள் சரணாலயம் இப்பகுதிக்கு அருகில்தான் உள்ளது.

கார்ப்பரேட் நிறுவனத்துக்காக நரபலி:
போலீசின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட விவசாயி.



இப்பகுதியிலுள்ள சதுப்புநில நீர்நிலைகளிலும் கடலை ஒட்டிய முகத்துவாரப் பகுதியிலும் மீன் பிடிப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ள ஆயிரக்கணக்கான மீனவர்கள் நிறைந்துள்ளனர். சதுப்புநிலப் பகுதியின் உப்பு நீரிலிருந்து உப்பு காய்ச்சும் தொழிலில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். இச்சதுப்பு நிலப்பகுதியை ஒட்டியுள்ள பாசனப் பகுதியில் பாரம்பரிய விவசாயிகளும் நிறைந்துள்ளனர். சிங்கப்பூரில் பதிவு பெற்றுள்ள ஏசியன் ஜென்கோ பிரைவேட் லிமிடெட் எனும் நிறுவனம், ஈஸ்ட் கோஸ்ட் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் எனும் தனது துணை நிறுவனத்தின் மூலம் காகரப்பள்ளியில் அனல் மின் நிலையத்தை நிறுவி, இவர்கள் அனைவரையும் அவர்களது மண்ணிலிருந்து வெளியேற்றத் துடிக்கிறது.

2640 மெகாவாட் திறன் கொண்ட, ரூ.12,000 கோடி மதிப்பிலான இம்மின் நிலையம், முதற்கட்டமாக 1320 மெகா வாட் திறனுடன் வரும் டிசம்பர் மாதத்தில் இயங்கத் தொடங்கும் என்றும், 2012 மார்ச் மாதத்தில் அடுத்த கட்டம் நிறைவேறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மார்கன் ஸ்டேன்லி எனும் ஏகபோக நிதி நிறுவனமும் பல தரகு முதலாளித்துவ நிதி நிறுவனங்களும் கோடிகோடியாய் முதலீடு செய்துள்ளதால், காகரப்பள்ளி வட்டாரம் வெறும் புறம்போக்கு பாழான நிலம் என்று மாவட்ட ஆட்சியரால் சான்றிதழ் அளிக்கப்பட்டு, இத்திட்டத்திற்காக ஏறத்தாழ 800 ஹெக்டேர் நிலத்தைக் கையளித்து 2008-இல் ஆந்திர மாநில அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டது. சுற்றுச்சூழல் தாக்கம் குறித்து இம்மின் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிபுணர்கள் அளித்த மதிப்பீட்டை ஏற்று, கடந்த 2009-ஆம் ஆண்டு மைய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் இந்த அனல் மின் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. அதன் தொடர்ச்சியாக காகரபள்ளி உள்ளிட்ட ஐந்து கிராமங்களின் பாசன நிலப் பகுதியும் காகர பள்ளியின் சதுப்புநிலப் பகுதியும் இக்கார்பரேட் நிறுவனத்துக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது.



போலீசு பயங்கரவாதம்:
காகரப்பள்ளியில் தீக்கிரையாக்கப்பட்ட விவசாயிகளின் வீடுகள்.

இதன் விளைவாக இப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளும் மீனவர்களும் உப்பளத் தொழிலாளர்களும் தங்களது மண்ணையும் வாழ்வையும் இழந்து அகதிகளாக்கப்படும் நிலையில் உள்ளனர். காகரப்பள்ளியின் சதுப்பு நிலப் பகுதியில் மின் நிலையக் கட்டுமானத்திற்காக ஒரு அடி அளவுக்கு நிலத்தை உயர்த்தினால்கூட, வடிகால்கள் பாதிக்கப்பட்டு இப்பகுதியின் நீரானது அருகிலுள்ள 29 கிராமங்களின் 30,000 ஏக்கர் பாசன நிலங்களை மூழ்கடித்து விடும். இந்த அபாயத்தை அறிந்த அக்கிராமங்களின் விவசாயிகளும் மீனவர்களும் உப்பளத் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து கடந்த 2010-ஆம் ஆண்டிலிருந்தே போராட்டங்களை நடத்தி வருகின்றனர். நிவாரண உதவியும் 700 பேருக்கு வேலையும் தரப் போவதாக அரசு ஆசை வார்த்தை காட்டிய போதிலும் இப்பகுதிவாழ் மக்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை.

தங்களது வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து விவசாயிகள் பலமுறை போராடிய போதிலும் மைய அரசோ, மாநில அரசோ அசைந்து கொடுக்காததால், அனல் மின் நிறுவனத்தின் வாகனங்கள் இப்பகுதியில் நுழைய முடியாதபடி விவசாயிகள் தடுப்பு அரண்களை அமைத்துப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். ஈஸ்ட் கோஸ்ட் நிறுவனமோ, அரசிடம் முறையிட்டு கட்டுமானப்பணிகள் பாதிக்கப்படுவதால் தடையரண்களை அகற்றுமாறு கோரியது. அதைத் தொடர்ந்து, கடந்த பிப்ரவரி மூன்றாவது வாரத்தில் ஆயிரக்கணக்கான அதிரடி போலீசார் காகரப்பள்ளியிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் குவிக்கப்பட்டனர்.

கடந்த பிப்ரவரி 25 அன்று அதிகாலையில் வட்டிதண்டரா கிராமத்தில் புகுந்த போலீசார், கிராம மக்களை அவர்களது வீடுகளிலிருந்து அடித்து இழுத்துச் சென்று சிறையிலடைத்தனர். கிராம மக்கள் அணிதிரண்டு இக்கொடுமையை எதிர்க்கத் தொடங்கியதும், கண்ணீர் புகை குண்டுகளை வீசி போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் பத்திரிகையாளர்கள் உள்ளிட்டு 30 பேர் காயமடைந்தனர். கிராம மக்கள் வெளியில் செல்ல முடியாதபடி தடை விதிக்கப்பட்டது.

வட்டிதண்டரா கிராமத்தில் அடக்குமுறையை ஏவி முன்னோட்டம் பார்த்த போலீசு, அடுத்த கட்டமாக பிப்ரவரி 28 அன்று காகரபள்ளி கிராமத்தினுள் புகுந்து கண்மூடித்தனமாகக் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியது. கண்ணீர் புகைக் குண்டு என்ற பெயரில் எரி குண்டுகளை வீசப்பட்டு -ற்றுக்கும் மேற்பட்ட வீடுகளும் வைக்கோல் போர்களும் எரிந்து சாம்பலாகின. ஊரைப் பற்றியெரிய வைத்து மக்களை ஆத்திரமூட்டித் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிடுவது என்பதே போலீசின் நோக்கம். ஊரைக் கொளுத்திய போலீசை எதிர்த்து 700-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் அணிதிரண்டு போர்க்குணத்தோடுப் போராடத் தொடங்கியதும், தங்களது வாகனங்களைத் தீயிட்டுக் கொண்டு, போராடும் மக்கள் வன்முறையில் ஈடுபட்டதாகச் சித்தரித்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது போலீசு. அதில் இருவர் கோரமாகக் கொல்லப்பட்டு, பலர் படுகாயமடைந்தனர்.

வீடுகள் தீயிடப்பட்டதால், வீட்டிலிருந்த பல பெண்களும் குழந்தைகளும் தீக்காயங்களுடன் தப்பிப் பிழைத்துள்ளனர். வீடுகள் எரிந்து போன நிலையில், பச்சிளம் குழந்தைகளுக்கு பால் பவுடர் கொடுக்கக் கூட விடாமலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும் மருத்துவ உதவிகளும் கிடைக்கவிடாமலும் தடை

யரண் அமைத்துக் கொண்டு அனைவரையும் விரட்டிய டித்தது, போலீசு. இக்கிராமப் பகுதிக்குள் இன்றுவரை பத்திரிகையாளர்களோ, மருத்துவர்களோ, மனித உரிமை அமைப்பினரோ நுழைய முடியாதபடி 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. 80 வயது மூதாட்டி உள்ளிட்டு -ற்றுக்கும் மேற்பட்டோர் கொலை முயற்சியில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட் டுள்ளனர். கொடிய சித்திரவதையோடு, அரசு பயங்கர வாத அட்டூழியங்கள் இப்பகுதியில் கேள்வி முறை யின்றித் தொடர்கின்றன.

போலீசு பயங்கரவாதத்தை எதிர்த்து மனித உரிமை அமைப்புகளும் எதிர்க்கட்சிகளும் மாநிலமெங்கும் கண்டனப் பேரணிகளையும் கடையடைப்புப் போராட்டங்களையும் கொடும்பாவி எரிப்புப் போராட் டங்களையும் நடத்தின. இருப்பினும், மாநில அரசோ துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்துவதோடு, இப் பகுதி சதுப்பு நிலமல்ல என்றே சாதிக்கிறது. எதிர்க் கட்சிகளின் கூச்சலுக்குப் பிறகு பாதிக்கப்படும் மக் களும் மறுவாழ்வுக்கான திட்டம் அறிவிக்கப்பட் டுள்ளதே தவிர, அனல் மின் திட்டம் நிறுத்தப்பட வில்லை. நாடாளுமன்றத்தில் ஆந்திரப் படுகொலை பற்றி கேள்வி எழுப்பப்பட்ட போது, விசாரணை நடப் பதாகக் கூறிச் சுற்றுச்சூழல் அமைச்சர் பசப்பியதைத் தவிர, வேறெந்த நடவடிக்கையும் இல்லை.

இப்படித்தான், கடந்த ஆண்டில் ஜூலை 14-ஆம் தேதியன்று ஆந்திராவின் சோமபேட்டை கிராமத்தில், நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்தின் கொள்ளையை எதிர்த்து, தமது வாழ்வுரிமைக்காக அக் கிராம மக்கள் கண்டன ஊர்வலம் நடத்தியபோது, போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைப் படுகாயப் படுத்தியது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் கார்பரேட் நிறுவனங்களின் கொள்ளைக்காக உழைக்கும் மக்களின் மண்ணையும் வாழ்வுரிமையை யும் பறித்து நரவேட்டையாடுவதே அரசின் கொள்கை யாகிவிட்டது. சட்டிஸ்கர், மே.வங்கம், ஒரிசா எனத் தொடங்கிய இக்கொடூர அரசு பயங்கரவாத அடக்கு முறை இப்போது ஆந்திராவிலும் தொடர்கிறது.

1930-ஆம் ஆண்டு தண்டியில் உப்பு சத்தியாகிர கத்தை காந்தி தொடங்கிய போது, அதேபோல கிழக்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள காகரபள்ளியிலும் உப்பு சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது. அன்றைய காலனிய ஆட்சியில் இப்போராட்டம் சட்டவிரோத மானதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அன்றைய போலீசு அதிகாரிகள் இப்போராட்டத்தைத் தடுக் கவோ, தாக்குதல் நடத்தவோ இல்லை. ஆனால், இன்றைய 'சுதந்திர' இந்தியாவில் அந்நிய கார்பரேட் கொள்ளைக்காக சொந்த நாட்டு மக்கள் மீதே போலீசு பயங்கரவாத வெறியாட்டம் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. காலனியாதிக்கத்தைவிட, மறுகாலனி யாதிக்கம் எவ்வளவு கொடூரமானது என்பதை காகர பள்ளியில் நடந்த பயங்கரவாதக் கொலைவெறியாட் டமே நிரூபித்துக் காட்டுகிறது.

• • •

**தி**ருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டிக்கருகே உள்ள கிராமம் தேர்வாய் கண்டிகை. ஏறத்தாழ ஐந்தா யிரம் பேர்களைக் கொண்ட இக்கிராமத்தில் 90 சதவீதத் துக்கும் மேற்பட்டோர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங் குடியினராவர். விவசாயமும், கால்நடை வளர்ப்புமே இம்மக்களின் முக்கியத் தொழில்களாகும். சுமார் 3500 ஏக்கருக்கு பாசன வசதி தரும் 3 ஏரிகள் இவ்வூருக் கருகே உள்ளன. இந்த ஏரிகளைச் சுற்றியுள்ள குறுங் காடுகளும் மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களும்தான் இவற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதியாகும். ஆந்திரப்பிர தேச எல்லையான வெள்ளவேடு மலைச்சரிவு வரை பச்சைப்பசேலென நெல்வயல்களும் குறுங்காடுகளும் இருக்கும் அப்பகுதியின் மிகை மழைநீர் தான் ஓடையாகத் திரண்டு சென்னைக்கு வடக்கே ஆரணியாறாக ஓடுகிறது. எலும்பு முறிவு, காய்ச்சல், தோல் நோய், பாம்புக்கடி போன்றவற்றிற்கு இக்காடு கள் வழங்கும் மூலிகைகளைத்தான் மருத்துவமனை ஏதுமற்ற தேர்வாய் கண் டிகை கிராம மக்கள் நம்பியுள்ளனர்.

இனி இவை எல்லாம் அம்மக் களுக்கு இல்லை. இந்த வனப்பகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க 1127 ஏக்கர் நிலம் 2007-ஆம் ஆண்டில் தமிழக அரசின் சிப்காட் நிறு வனத்தால் கையகப்படுத்தப்பட்டது. இங்கு மெக்கெலின் எனும் பிரான்சு நாட்டு டயர் தொழிற்சாலை நிறுவப்பட வுள்ளது. உலகெங்கும் 69 கிளைகளோடு ஆண்டுக்கு 1.9 கோடி பேருந்து, லாரி டயர்களை உற்பத்தி செய்யும் இப்பன் னாட்டு நிறுவனம் 2012-இல் முதற்கட்ட

ஊரைக் கொளுத்திய போலீசுக்கு எதிராக காகரப்பள்ளி விவசாயிகளின் போராட்டம்.



உற்பத்தியைத் தொடங்கப் போவதாக அறிவித்துக் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

டயர் தொழிற்சாலை நிறுவப்பட்டால், பாசனத்துக்கான ஏரிகள் வறண்டு, ஆரணியாறு கழிவு நீரோடையாகக் குறுகிப் போய் விடும் என்று பாசனத் துறை அதிகாரிகளே தெரிவிக்கின்றனர். டயர் தொழிற்சாலையின் புகையாலும் கழிவுகளாலும் நிலத்தடி நீரும் சுற்றுச் சூழலும் கடுமையாகப் பாதிக்கப்படும். காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் அழிக்கப்படுவதால், கால்நடை வளர்ப்பை நம்பியுள்ள பின்தங்கிய நிலையிலுள்ள இப்பகுதிவாழ் மக்களின் வாழ்வாதாரங்கள் பிடுங்கப்பட்டு, அம்மக்கள் அகதிகளாக நேரிடும்.



நிலப்பறிப்புக்கு எதிராக தேர்வாய் கண்டிகை கிராம மக்களின் உண்ணாவிரதப் போராட்டம்.

இப்பேரபாயத்தை உணர்ந்து, தமது வாழ்வுரிமையைப் பறிக்கும் இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்த்து தேர்வாய் கண்டிகை கிராம மக்கள் ஆர்ப்பாட்டம், மனு கொடுத்தல், கிராம சபையில் எதிர்ப்புத் தீர்மானம் எனப் பல வகைகளில் போராடியும் தமிழக அரசு அசைந்து கொடுக்கவில்லை. நிலத்தைக் கையகப்படுத்த 2009-இல் புல்டோசர்களைக்கொண்டு தமிழக அரசு மேய்ச்சல் நிலத்தைச் சிதைக்க ஆரம்பித்தபோது, கொதித்தெழுந்த மக்கள் மீது அரசு அடக்குமுறையை ஏவியது. போராடியவர்களில் 61 பேரைக் கைது செய்து, பொய் வழக்கு போட்டுச் சிறையிலடைத்தது. இந்த அடக்குமுறையையும், தங்கள் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டத்தையும் எதிர்த்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலை இக்கிராமத்தினர் புறக்கணித்தனர்.

நீதிமன்றத்தின் மூலம் இந்த நிலப் பறிப்பைத் தடுத்து விட முடியும் என நம்பி ''தேர்வாய் கிராம முன்னேற்ற நல சங்கம்'' மூலம் வழக்கு தொடுத்து கிராம மக்கள் வாதாடினர். இவ்வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், மரங்களை வெட்டவும் கட்டுமானப் பணிகளை நிறுத்தவும் இடைக்காலத் தடை விதித்தது. இத்தடையை மீறி கட்டப்பட்டிருந்த வளாகச் சுவரை மக்கள் திரண்டு போய் 2010-இல் உடைத்துப் போட்டனர். '' தேர்வாய் கண்டிகையில் கையகப்படுத்தப்படும் நிலம் 500 ஹெக்டேருக்குக் குறைவென்பதால், மத்திய சுற்றுச்சூழல் துறையிடம் அனுமதிச் சான்றைப் பெறத் தேவையில்லை'' என்று கூறிய தமிழக அரசின் வாதத்தை ஏற்று, நீதிமன்றமும் இடைக்காலத் தடையை சென்ற ஆண்டு மே மாதம் நீக்கியது.

கையகப்படுத்தப்பட்ட பகுதியில் மக்கள் நுழையாமல் இருக்க வேலி அமைத்துக் கட்டுமான வேலையை சிப்காட் துரிதப்படுத்தியதும், கடந்த பிப்ரவரி 15 அன்று தேர்வாய் மக்கள் அணிதிரண்டு முற்றுகையிட்டு கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு கோரினர். அதிகாரவர்க்கமோ பிப்ரவரி 23 வரை இப்பணிகளை நிறுத்திவைக்க ஒப்பந்தம் போடுவதாகப் பேசிக் கொண்டே, போலீசை ஏவி முன்னணியாளர்களில் எட்டு பேரைக் கைது செய்து, பொய்வழக்குப் போட்டு சிறையில் அடைத்தது.

கட்டுமானப் பணிகளை நிறுத்தி, கைப்பற்றிய நிலத்தை தங்களுக்குத் திரும்பத் தரவேண்டும்; போடப்பட்டுள்ள பொய்வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும் என்ற கோரிக்கைகளுடன் தேர்வாய் கண்டிகை கிராமத்தின் 1200 பேர் கடந்த பிப்ரவரி இறுதி வாரத்தில் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினர். 600 பேர் தங்களின் வாக்காளர் அடையாள அட்டைகளை அதிகாரிகளிடம் ஒப்படைத்து விடுவது என முடிவு செய்திருந்தனர். மாவட்ட ஆட்சியரின் வாக்குறுதிக்குப் பின்னர், தற்போது உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ள போதிலும், மக்களின் குமுறல் அடங்கிவிடவில்லை.

இதர மாநில அரசுகள் கண்மூடித்தனத்தனமான அடக்குமுறையின் மூலம் நிலப்பறிப்பை நடத்திவரும் அதேசமயம், தமிழக அரசோ போராடும் மக்களைக் கைது செய்வது, பொய்வழக்கு போட்டு போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்வது, முன்னணியாளர்களை விலை பேசுவது முதலான நரித்தனமான உத்திகளின் மூலம் ஜனநாயக வேடமிட்டுக் கொண்டு, அதே வேலையைச் செய்து வருகிறது. உத்திகள் வேறாக இருந்தாலும் நோக்கம் ஒன்றுதான். நாட்டை வல்லரசாக்குவது, மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற வாதங்களுடன் உழைக்கும் மக்களை சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கும் இக்கொடுஞ்செயலுக்கு எதிராகவும், ஏகாதிபத்திய கொள்ளைக்கும் மறுகாலனியாக்கத்திற்கும் எதிராகவும் நாடு தழுவிய போராட்டங்களைக் கட்டியமைப்பதே இன்றைய உடனடி அவசிய மாகியுள்ளது.

● அழகு

# தண்ணீர்க் கொள்ளையர்களின் படையெடுப்பு!

**இந்தியாவின் தண்ணீர் வளத்தைக் கைப்பற்றித் தனியார்மயமாக்க, பன்னாட்டு நிறுவனங்கள் புற்றீசல் போலக் கிளம்பி வருகின்றன.**

இயற்கையின் கொடையான தண்ணீர் அனைவருக்கும் பொதுவானது, அதனை அனைவரும் பகிர்ந்து கொள்ளும் உரிமை உள்ளது என்ற நியதிக்கு, முதலாளித்துவம் என்றுமே கட்டுப்பட்டதில்லை. மற்ற வளங்களைப் போலவே தண்ணீரையும் ஒரு விற்பனைப் பண்டமாக்கிவிடவே, அது துடித்துக் கொண்டிருக்கிறது. நம் நாட்டின் நீர் ஆதாரங்களைக் கைப்பற்ற உலக வங்கியின் துணையுடன் பல வழிகளில் பன்னாட்டு நிறுவனங்கள் முயன்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, ''இந்தியாவின் வளர்ந்து வரும் தண்ணீர் வர்த்தகத் துறையின் 50 பில்லியன் டாலர் (2,50,000 கோடி ரூபாய்) மதிப்பிலான சந்தையைக் கைப்பற்றுவோம்'' என்ற முழக்கத்துடன் அமெரிக்க கார்பரேட் கூட்டம் ஒன்று கடந்த பிப்ரவரி மாத இறுதியில் பெங்களூருவிற்கு வந்து சென்றுள்ளது.

அமெரிக்க வர்த்தகத் துறை தனது நாட்டு முதலாளிகள் மற்ற நாடுகளின் இயற்கை வளங்களைச் சூறையாடுவதற்கு உதவுவதற்காகவே, ''சர்வதேச வர்த்தக மேலாண்மைக் கழகம்'' என்ற அமைப்பை வைத்துள்ளது. அந்த அமைப்பு இந்தியா போன்ற ஏழை நாடுகளின் தண்ணீர் வளங்களைச் சூறையாட, ''தண்ணீர் வர்த்தக இயக்கம்'' என்ற பெயரில் ஒரு குழுவை உருவாக்கியுள்ளது. இயற்கையின் கொடையான தண்ணீரைக் காசு கொடுத்து வாங்கும் சரக்காக மாற்றுவது தான் இவர்களது இலட்சியம். இந்தியத் தண்ணீர் வர்த்தகத்தின் தற்போதைய மதிப்பு இரண்டரை இலட்சம் கோடி ருபாய்கள் எனக் கணக்கிட்டுள்ள இவர்கள், அதில் முதலீடு செய்து கொள்ளை இலாபமடிக்க தற்போது இந்தியாவை வட்டமடித்து வருகின்றனர்.

தண்ணீர் வர்த்தகத்திற்கான சந்தையைப் பற்றித் தெரிந்துகொள்வது, இத்துறையில் தங்களுக்கு உதவக் கூடிய தரகு முதலாளிகளை அடையாளம் கண்டு கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொள்வது போன்ற திட்டங்களுடன் இந்தியா வந்த இந்தக் குழுவினருக்கு பெங்களூரு நகரில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. பல்வேறு இடதுசாரி மற்றும் முற்போக்கு அமைப்புகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் நடத்திய போராட்டங்களின் காரணமாக, இவர்கள் தங்களது கூட்டத்தை வேறொரு இரகசிய இடத்திற்கு மாற்றி விட்டனர். இந்தக் குழுவின் வருகை பற்றி எதுவும் தெரியாது என இறுதிவரை சாதித்த மாநில அரசு, கூட்டம் ஒழுங்காக நடைபெற அனைத்து உதவிகளையும் செய்தது.

அமெரிக்கத் தண்ணீர்க் கொள்ளையர்களுக்கு எதிராக பெங்களூருவில் காவிரி பவன் அருகே எதிர்க்கட்சிகளும் தன்னார்வ அமைப்புகளும் இணைந்து நடத்தும் ஆர்ப்பாட்டம்.



குடிநீர் சுத்திகரிப்புக்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், ஆலோசனைகளை வழங்குதல், தொழில்நுட்ப உதவிகள் வழங்குதல், கழிவுநீர் மேலாண்மைக்கு உதவுதல் என்ற பெயரில் இக்குழு உள்ளே நுழைந்தாலும், இவர்களது உண்மையான நோக்கம் தண்ணீர் தனியார்மயம் தான். தண்ணீர் வியாபாரத்தில் பன்னாட்டு நிறுவனங்களே நேரடியாகக் களத்திலிறங்கிக் கொள்ளையடிக்கும் கொச்சபம்பா பாணி தனியார்மயம் , மக்களிடையே பெரும் எதிர்ப்புக்குள்ளாகி தோல்வியடைந்துவிட்டதால், தற்போது இவை போன்ற பெயர்களில் புற

வாசல் வழியாக உள்ளே நுழைகின்றனர். உள்நாட்டு குடிநீர் விநியோகத்தைக் கைப்பற்றுவதோடு, இந்தியா விலிருந்து மற்ற நாடுகளுக்குத் தண்ணீரை ஏற்றுமதி செய்யவும் இவர்கள் திட்டமிட்டுச் செயல்படுகின் றனர்.

தண்ணீர் வியாபாரத்திற்கு ஏற்றவாறு சட்டங்களைத் திருத்துவது, அரசின் தண்ணீர்க் கொள்கை மற்றும் வரி விதிப்புகளில் தலையிட்டு அவற்றை மாற்றுவது, இதற் கான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவது, இவையனைத்திற்கும் மேலாக தண்ணீர் வியாபாரத் திற்கு ஆதரவானதொரு பொதுக் கருத்தை உருவாக்கு வது போன்ற வேலைகளில் இவர்கள் தொடர்ந்து ஈடு பட்டு வருகின்றனர்.

ஏற்கெனவே பல இந்திய நகரங்களின் குடிநீர் விநி யோகம் பன்னாட்டு நிறுவனங்களின் கைகளுக்கு மாற்றப்பட்டுவிட்டன. கர்நாடக மாநிலத்தில் மட்டும் மைசூரு, ஹுப்ளி, தார்வாடு, பெல்காம், குல்பர்கா ஆகிய ஐந்து நகரங்களின் குடிநீர் விநியோகம் பன்னாட்டு நிறுவனங்கள் வசம் உள்ளது. ஆனால், இந்த மாற்றங்கள் அனைத்தும் வெளிப்படையாக நிகழ வில்லை. யாருக்கும் தெரியாமல் அதிகாரிகள் மட்டத் திலான ஒப்பந்தங்கள் மூலமே அவை நிறைவேற்றப் பட்டுவிட்டன. நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத் திலோ, ஏன் அந்தந்த நகர்மன்றங்களிலோ கூட இது பற்றி விவாதிக்கப்படவில்லை. மாநகராட்சி அதி காரிகளை நேரடியாகச் சந்தித்துப் பேசும் பன்னாட்டு நிறுவனங்கள் இரகசியமாகவே தங்களது காரியங் களைச் சாதித்துக் கொள்கின்றன. தற்போது வந்து சென்றிருக்கும் குழுவினர்கூட பெங்களூரு மாநக ராட்சி அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதைத் தங்களது திட்டத்தில் வைத்திருந்தனர்.

பன்னாட்டு நிறுவனங்கள் வழங்கும் பரிந்துரை களை ஏற்று இயற்கை வளங்களை, கார்பரேட் நிறு வனங்கள் சுரண்டிக் கொழுக்க வகை செய்யும் மறு காலனியாக்க நடவடிக்கைகளின் அங்கமாக இது போன்ற எண்ணற்ற குழுக்கள் நம் நாட்டின் மீது படை யெடுத்து வருகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்படு வதாகக் கூறப்படும் நாடாளுமன்றத்திற்கோ, சட்ட மன்றத்திற்கோ, உள்ளாட்சி அமைப்புகளுக்கோ இது பற்றிக் கேள்வி கேட்கவோ, ஏன் தெரிந்து கொள்ளவோ கூட எவ்வித உரிமையும் இல்லை. இந்த அவைகளின் உறுப்பினர்களே தனியார்மயத் தாசர்களாக இருப்ப தால், இது பற்றியெல்லாம் கேள்வியெழுப்பவும் விரும்புவதில்லை.

● இளங்கோ

# இதுதான் போலீசு!

## ஜி.டி.பி. கிரானைட்ஸ் முதலாளிக்கு அடியாளாகச் செயல்படுகிறது சேலம் நகர போலீசு

**சே**லம் மாமாங்கத்திலுள்ள ஜி.டி.பி. கிரானைட்ஸ் நிறு வனத்தில் தொழிற்சங்கம் அமைத்த ஒரே காரணத்திற்காக, கடந்த அக்டோபர் 2007-இல் இந்நிறுவனத்தைச் சேர்ந்த 53 தொழிலாளர்கள் சட்டவிரோதமாக வேலைநீக்கம் செய்யப் பட்டனர். மூன்று ஆண்டுகளாகப் பல போராட்டங்கள் நடத்தியபோதிலும் ஆலை முதலாளி அசைந்து கொடுக் காததால், கடந்த ஜனவரியில் மாவட்ட ஆட்சியரை முற்று கையிட்டு பு.ஜ.தொ.மு. தலைமையில் தொழிலாளர்கள் போராடினர். (பார்க்க: புதிய ஜனநாயகம், பிப்.2011)

பின்னர் மாவட்ட ஆட்சியர், தொழிலாளர்களின் கோரிக் கையில் நியாயம் இருப்பதாகவும், ஜி.டி.பி. நிர்வாகம் இத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்குமாறு தான் பரிந் துரைப்பதாகவும் அறிவித்தார். மாவட்ட ஆட்சியரின் வழி காட்டுதலின் பேரில் தங்களுக்கு வேலை வழங்கக் கோரி மார்ச் 14 அன்று இவ்வாலை முன்பாகத் தொழிலாளர்கள் முற்றுகையில் ஈடுபட்டனர். பாதுகாப்புக்கு வந்த போலீசு துணை கமிசனர், தொழிலாளர் கோரிக்கை நியாயமானது எனவும் தொடர்ந்து நிர்வாகத்துடன் பேசுவதாகவும் தெரி வித்தார். இதனால் நம்பிக்கை அடைந்த தொழிலாளர்கள் முற்றுகையைக் கைவிட்டனர்.

இதன் பின்னர், வேலைக்கு வராததற்கான விளக்கம் கேட்டு ஜி.டி.பி. நிர்வாகத்திடமிருந்து தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் கடிதம் வந்ததையடுத்து, தொழிலாளர் கள் 26-ஆம் தேதி ஆலைக்கு வந்து விசாரித்தனர். ஆலை நிர் வாகமோ, இந்தக் கடிதம் ஜி.டி.பி. தலைமை அலுவலகத்தி லிருந்து அனுப்பப்பட்டுள்ளதாகவும், தொழிலாளர்களை அங்கே வருமாறு கோரப்பட்டுள்ளதால் தாங்கள் எதுவும் பேச இயலாதெனத் தெரிவித்தது. இதனை ஏற்க மறுத்த தொழி லாளர்கள், நாங்கள் இங்கேதான் வேலை செய்தோம், இங்கேயே எங்கள் பதிலை வாங்கிக் கொள் என்று ஆலையை முற்றுகையிட்டு, 26, 27 இரு நாட்கள் அங்கேயே முகாமிட்டனர்.

பின்னர் மார்ச் 28 அன்று, பு.ஜ.தொ.மு. மாவட்டத் தலை வர்களான தோழர் பரசுராமன், தோழர் நேசன் ஆகியோர் தலைமையில் அணிதிரண்டு ஜி.டி.பி. நிர்வாகத்தின் தலைமை அலுவலகத்திற்கு பேச்சுவார்த்தைக்குச் சென் றனர். அடுத்த சில நிமிடங்களில் அங்கு போலீசு குவிக்கப் பட்டது. தொழிலாளர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி தரதரவென இழுத்து சென்று வண்டியில் ஏற்றிய போலீசு, 4 குழந்தைகளுடன் 7 பெண்கள் உட்பட 34 பேர் மீது கொலைமுயற்சி உள்ளிட்டுப் பிணையில் வரமுடியாத பிரிவுகளில் பொய்வழக்கு போட்டுக் கைது செய்துள்ளது. மாவட்ட ஆட்சியரின் உத்தரவு சேலம் போலீசிடம் செல்லு படியாகவில்லை. ஜி.டி.பி. முதலாளி முத்துவின் உத்தர வைத்தான் போலீசார் செயல்படுத்துகின்றனர் என்பது இத் தாக்குதல் மூலம் மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

ஜி.டி.பி. முதலாளியும் போலீசும் தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை அடக்குமுறையால் ஒடுக்கி விட முடியும் என மனப்பால் குடிக்கின்றன. ஆனால், முதலாளியின் கொட்டமும் போலீசின் அடக்குமுறையும் வென்றதாக வரலாறில்லை. இதை மீண்டும் நிரூபித்துக் காட்டும் வகையில், அனைத்து உழைக்கும் மக்களின் ஆதரவுடன் பு.ஜ.தொ.மு. தலைமையில் அடுத்தக் கட்டப் போராட்டத்திற்குத் தொழிலாளிகள் ஆயத்தமாகிவரு கின்றனர்.

தகவல்: பு.ஜ.தொ.மு., சேலம்

## சென்னை-பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மீதான தாக்குதல்:

# போலீசின் அவதூறு ஊடகங்களின் பக்கமேளம்

**க**டந்த பிப்ரவரி 23 அன்று சென்னை - பச்சையப்பன் கல்லூரி வளாகத்திற்குள் நுழைந்த போலீ கும்பல், அக்கல்லூரி மாணவர்கள் மீது தடியடி நடத்தியும், கல், செருப்பு, உடைந்த பாட்டில்களை மாணவர்கள் மீது வீசியெறிந்தும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைத் தொடுத்தது. தடியடியில் இருந்து மாணவர்களைக் காப்பாற்ற முயன்ற அக்கல்லூரி ஆசிரியர்களையும் தாக்கிய போலீசு கும்பல், கல்லூரியின் உடைமைகளையும் சேதப்படுத்தியது. இம்மிருகத்தனமான தாக்குதலிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள முயன்றதற்காக, போலீசைப் பணிசெய்ய விடாமல் தடுத்தல் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட பிரிவுகளின் கீழ் 300 மாணவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரிக்குள் அத்துமீறி நுழைந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் தாக்கி, உடைமைகளையும் சேதப்படுத்தியிருக்கிற போலீசாரின் அடாவடித்தனத்தை எந்த ஊடகமும் கண்டிக்கவில்லை. மாறாக, பேருந்து தினக் கொண்டாட்டத்தை போலீசார் தடுத்ததனால் ஆத்திரமுற்ற மாணவர்கள், பாதுகாப்புப் பணியில் இருந்த துணை கமிசனர் லெட் மி மீது பாக்கெட் தண்ணீரைப் பீய்ச்சியடித்ததாகவும், மாணவர்கள் போலீசை தாக்கியதில் பெண் போலீ உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட போலீசார் படுகாயமுற்றதாகவும், இதன் காரணமாகவே கல்லூரிக்குள் நுழைந்து தடியடி நடத்த வேண்டிய அவசியம் போலீ க்கு ஏற்பட்டதாகவும் திரித்து செய்தி வெளியிட்டு, போலீசின் அத்துமீறலை ஊடகங்கள் நியாயப்படுத்தியுள்ளன.

அன்றாடப் பேருந்து பயணத்தின்போதும், குறிப்பாக பேருந்து தினக் கொண்டாட்ட நாளன்றும் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல, சென்னையில் உள்ள வேறு சில கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுள் ஒரு பிரிவினர் நாகரிகமின்றிப் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் நடந்து கொள்வது மறுக்கமுடியாத ஒன்றுதான். ஆனால், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், மாணவர்களின் இந்த அராஜகத்தைக் கட்டுப்படுத்திச் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் நடத்தப்பட்டதல்ல; ஊடகங்களும் போலீசும் சித்தரிப்பது போல தற்செயலாய் நடைபெற்றுவிட்ட தாக்குதல் சம்பவமும் அல்ல.

போலீசின் தடையை மீறிப் பேருந்து தினக் கொண்டாட்டத்தை நடத்த முயன்ற ஒரு சில மாணவர்களை அல்லது போலீசு துணை கமிசனர் லெட் மி மீது தண்ணீரைப் பீய்ச்சியடித்ததாகச் சொல்லப்படும் அந்தக் குறிப்பிட்ட மாணவரைக் கைது செய்து, இந்தப் பிரச்சினையைத் தடியடியின்றிச் சுமுகமாக முடித்திருக்க முடியும். ஆனால், போலீசோ அப்படிபட்ட முயற்சிகள் எதையும் செய்யவில்லை. மேலும், வழக்கமாகப் பேருந்து தினக் கொண்டாட்டத்தில் பிரச்சினை ஏதேனும் ஏற்பட்டால், உடனடியாகச் சம்பந்தப்பட்ட கல்லூரிக்குத் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து, ஆசிரியர்களை வரவழைத்து மாணவர்களை அழைத்துக் கொண்டு போகும்படிச் சொல்வதுதான் இதற்கு முன்புவரை போலீசார் பின்பற்றி வந்த நடைமுறை. ஆனால், இச்சம்பவத்தின்பொழுது போலீசார் அந்த நடைமுறையைப் பின்பற்றவில்லை. சம்பவத்தின் இந்தப் பின்னணி போலீசுக்கு ஏதோவொரு உள்நோக்கம் இருக்கக் கூடும் என்பதைத்தான் உறுதிப்படுத்துகிறது.

கல்லூரிக்குள் புகுந்து தாக்கும் போலீசாரை எதிர்த்து நிற்கும் மாணவர்கள்.



கிட்டதட்ட 6,000 மாணவர்கள் படிக்கும் பச்சையப்பன் கல்லூரியில் ஒரு சில மாணவர்கள்தான் கும்பலைச் சேர்த்துக் கொண்டு பேருந்துப் பயணம் போன்ற பொது இடங்களில், அநாகரிகமாகவும், அராஜகமாகவும் நடந்து வருகின்றனர். அதே சமயம், இதற்கு நேர் எதிரான பண்புகளைக் கொண்ட -ற்றுக்கணக்கான மாணவர்கள் அக்கல்லூரியில் படித்து வருவது எத்தனை பேருக்குத் தெரியும்?



ஈழத் தமிழினப் படுகொலையைக் கண்டித்து நடந்த வகுப்புப்புறக்கணிப்புப் போராட்டம் (இடது); மெட்ரோ ரயில் திட்டத்திற்காக பச்சையப்பன் கல்லூரி நிலம் அபகரிக்கப்படுவதைக் கண்டித்து நடத்தப்பட்ட உள்ளிருப்புப் போராட்டம்.

இலங்கையில் இந்திய அரசின் ஆதரவோடு ராஜ பக்சே கும்பல் நடத்திய ஈழத் தமிழர் படு கொலையைக் கண்டித்தும், சென்னை - கிண்டி யிலுள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் தமது உரிமைகளுக்காக நடத்திய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அனைத்து அரசு உதவிபெறும் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கக் கோரியும் - இப்படிப் பல்வேறு பிரச்சினை களுக்காக அரசை எதிர்த்துப் போராடியுள்ள இக் கல்லூரி மாணவர்கள், தற்பொழுது சென்னை நகரில் அமைக்கப்பட்டு வரும் மெட்ரோ ரயில் திட்டத்திற் காகத் தமது கல்லூரியின் நிலம் அபகரிக்கப்படும் அபாயத்தை எதிர்த்தும் போராடி வருகின்றனர். இவை மட்டுமின்றி, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே தம்மிடம் அராஜகமா கவும் அநாகரீகமாகவும் நடந்துகொண்ட போலீசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி, அப்படி நடந்து கொண்ட போலீசை மன்னிப்புக் கேட்க வைத்ததோடு, அப்போலீசாரைப் பணியிடை நீக்கமும் செய்ய வைத் தனர்.

பச்சையப்பன் கல்லூரியில் பயிலும் அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்களை அமைப்பாகத் திரட்டி, அவர்களிடம் தமது உரிமைகளுக்காகவும் பொது பிரச்சினைகளுக்காகவும் போராட வேண்டும் என்ற உணர்வைப் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி என்ற நக்சல்பாரி புரட்சிகர அமைப்புதான் ஊட்டி வருகிறது. இப்படிபட்ட புரட்சிகர அமைப்பின் செல்வாக்கின் கீழ் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் திரண்டு போராடி வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத போலீசு, கல்லூரியில் அவ்வமைப்பின் செயல்பாட்டை முடக்க பல்வேறுவிதமான இடை யூறுகளையும் நெருக்கடிகளையும் கொடுத்து வரு கிறது. இத்தடியடி குறித்து உதவி கமிசனர் சாரங்கன் என்.டி.டி.வி.க்கு அளித்த நேர்காணலில், ''மாணவர் கள் இந்த அளவுக்கு எதிர்ப்பு காட்டுகிறார்கள் என்றால், உள்ளே ஏதோ ஒரு சக்தி அவங்களை இயக்குது'' - எனக் கூறியிருக்கிறார். பச்சையப்பன் கல்லூரி மாண வர்கள் மீது நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்கு தலை இந்தப் பின்னணியில் வைத்துதான் பார்க்க வேண்டும்.

நக்சல்பாரி புரட்சிகர மாணவர் அமைப்பின் கீழ் திரண்டுவரும் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கு லத்தியின் மூலம் பாடம் புகட்ட விரும்பிய போலீசு, அதற்கு பேருந்து தினக் கொண்டாட்டத்தை வாய்ப் பாகப் பயன்படுத்திக் கொண்டது. தனது இந்த உள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான சாதக மான புறச்சூழலையும் திட்டமிட்டே உருவாக்கியது, சென்னை போலீசு.

இந்த ஆண்டு நடைபெற்ற அனைத்து பேருந்து தினக் கொண்டாட்டத்திலும் பேருந்து புறப்படும் இடத்திலேயே மாணவர்களைக் கலைந்துபோகச் சொல்லித் தடுப்பதற்குப் பதிலாக, பேருந்தில் மாண வர்களை ஏற அனுமதித்து விட்டு, வழி நெடுகிலும் வழக்கத்திற்கு மாறாக போலீசுப்படையைக் குவித்துப் பீதியூட்டியது. ஆங்காங்கே அப்பேருந்தை வழிமறித்து மாணவர்களைக் கலைந்துசெல்லுமாறு பே வதாகக் காட்டி, அதன்மூலம் போக்குவரத்திற்கு இடையூறை ஏற்படுத்தி, பொதுமக்களிடம் மாணவர்களுக்கு எதிரான பொதுக்கருத்தையும் உருவாக்கியிருந்தது. மேலும், பேருந்து தினக் கொண்டாட்டத்தைத் தடை செய்யக் கோரித் தொடரப்பட்ட பொதுநல வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த இடைக்கால உத்திரவை, தடியடி தாக்குதல் நடத்துவதற்குத் தரப்பட்ட உரிமமாக எடுத்துக் கொண்டது.

குடிநீர் தேவை உள்ளிட்ட கோரிக்கைகளுக்காகப் போராடும் பொதுமக்கள் மீது தடியடி நடத்தும் போலீ சார், அதனை நியாயப்படுத்த தம் மீது யாரோ கல்லெ றிந்ததாகப் புளுகுவது வாடிக்கையான ஒன்று. துணை கமிசனர் லெட்சுமி மீது மாணவர்கள் தண்ணீரைப் பீச்சி யடித்ததாகச் சொல்லப்படுவதும் இப்படிபட்ட புளுகாக இருக்கலாம். போலீ நடத்திய தாக்குதலின் இப்பின்னணியைப் பொதுமக்களிடம் எடுத்துச் சொல் வதன் மூலம் மட்டுமே, பச்சையப்பன் கல்லூரி மாண வர்கள் பற்றி அவதூறு பிரச்சாரத்தை நடத்திவரும் சென்னை போலீசின் முகத்தில் கரியைப் பூச முடியும்; அவர்களின் ஆதரவைப் பெறுவதன் மூலம் தான் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு பச்சையப்பன் கல்லூரி நிலம் அபகரிக்கப்படுவதையும் தடுக்க முடியும்.

● இளங்கதிர் மற்றும் எழில்

# பட்ஜெட் 2011-12:


# அதே செக்குமாட்டுப் பாதையில்...

**மக்களை வாட்டியெடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பது என்ற பெயரில் தனியார்மயத்தை இன்னும் தீவிரப்படுத்த முனைகிறது, பட்ஜெட்.**

விலை உயர்வு, விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தி வீழ்ச்சி, 2 ஜி, எஸ்-பேண்ட், ஆதர்ஷ் உள்ளிட்ட பல ஊழல்கள், கறுப்புப் பணம், சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களின் நிலப் பறிப்புக்கு எதிரான பழங்குடியின மக்கள்-விவசாயிகளின் போராட்டம் எனப் பல்வேறு சமூக-பொருளாதார பிரச்சினைகள், நெருக்கடிகள் நாட்டை உலுக்கி வருவதற்கு இடையே 2011-12 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் வெளியாகியிருக்கிறது. இந்த நெருக்கடிகளைத் தீர்க்க பட்ஜெட்டில் புதிய திட்டங்களும், வழிமுறைகளும் அறிவிக்கப்பட்டிருக்கிறதா என அலசிப் பார்த்தால், தனியார்மயம் - தாராளமயம் என்ற பழைய செக்குமாட்டுப் பாதையில்தான் பட்ஜெட் பயணம் செய்கிறது. இந்த நெருக்கடிகள் தோன்றவும், முற்றவும் எந்தக் கொள்கைகள் காரணமாக அமைந்தனவோ, அதையே இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்த முனைகிறது, பட்ஜெட்.

உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த விளைச்சலை அதிகரிப்பதற்கான திட்டங்களைத் தொடங்கப் போவதாக பட்ஜெட்டில் தடபுடலாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், விவசாயத்திற்கும் விவசாயம் தொடர்பான பிற தொழில்களுக்கும் கடந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட (மொத்த) நிதியைவிட (ரூ.1,24,451 கோடி) இந்த ஆண்டில் 5,422 கோடி ரூபாயை வெட்டிவிட்டுத்தான் நிதி (ரூ.1,18,883 கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது. ''விவசாயத்தில் முதலீடு செய்வதை அரசு கைகழுவி விடவேண்டும்'' என்ற தனியார்மய-தாராளமயக் கொள்கைப்படிதான் இந்த ஆண்டிற்கான பட்ஜெட்டும் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைத்தான் இந்த வெட்டு எடுத்துக் காட்டுகிறது. எனினும், வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்காக இந்த ஆண்டு பட்ஜெட்டில் கடந்த ஆண்டைவிட 1 இலட்சம் கோடி ரூபாய் அதிகமாக நிதி (ரூ.4,75,000 கோடி) ஒதுக்கப்பட்டிருப்பதைக் காட்டி, இது விவசாயத்திற்கு ஊக்கம் தரும் பட்ஜெட் என காங்கிரசு கூட்டணி அரசு ஆரவாரம் செய்து வருகிறது.

2010 டிசம்பர் முடிய வங்கிகளிலிருந்த மொத்த சேமிப்பு 42.15 இலட்சம் கோடி ரூபாய். இச்சேமிப்பிலிருந்து வங்கிகள் 35.77 இலட்சம் கோடி ரூபாயைக் கடனாக வழங்கியிருக்கின்றன. கடந்த ஆண்டு விவசாயத்திற்கென வழங்கப்பட்ட 3.75 இலட்சம் கோடி ரூபாய், இந்த மொத்தக் கடனில் வெறும் 10 சதவீதம் தான். மீதிக் கடன்கள் அனைத்தும் முதலாளிகளின் தேவைகளுக்கு, குறிப்பாக ரியல் எஸ்டேட் முதலைகளுக்கும், கார் வாங்க, வீடு கட்ட என மேட்டுக் குடி, நடுத்தர வர்க்கத்தினரின் தேவைகளுக்கும்தான் வழங்கப்பட்டுள்ளன. எனவே, வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குத் தரப்படுவதாகச் சொல்லப்படும் கடன் தொகையைக் கண்டு மலைத்துப் போகத் தேவையில்லை.




வங்கிகள் மூலம் தரப்படும் விவசாயக் கடனை, விவசாயத்தில் அரசாங்கம் செய்யவேண்டிய முதலீட்டிற்கு மாற்றாகப் பார்க்க முடியாது. மாணவர்களுக்குக் கல்வி தர வேண்டிய அரசு, கல்விக் கடன் வழங்கி தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பது போன்றதுதான் இது. இப்படிக்

கொடுக்கப்படும் கடன் பெரும் பாலான ஏழை, நடுத்தர விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை என்பதை விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளே நிரூபித்து வருகின்றன. அப்படியென்றால், இந்தக் கடனை வாங்கி அனுபவிக்கும் 'விவசாயிகள்' யார் என்பதுதான் கேள்வி.



**மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை அதிகரிக்கும் நோக்கத்தோடு, அவற்றுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தில் 15,000 கோடி ரூபாயை பட்ஜெட்டில் வெட்டியிருக்கிறார், நிதியமைச்சர்**

புதுப் பணக்கார விவசாயிகளும், கார்ப்பரேட் நிறுவனங்களும் அதிக அளவில் மூலதனமிட்டு, வர்த்தக, ஏற்றுமதி நோக்கில் பயிர் செய்வதையும் விவசாயமாக அங்கீகரித்துக் கடன் வழங்க வேண்டும்; விவசாயத் துறையில் இவர்களுக்கு வழங்கப்படும் மறைமுகக் கடன்களின் வரம்பையும் அதிகரிக்க வேண்டும் என்ற இரண்டு மாற்றங்கள் விவசாயக் கடன் கொள்கையில் மன்மோகன் சிங் கும்பலால் புகுத்தப்பட்ட பின், விவசாயக் கடன் வழங்குவதில் முன்னேப்போதும் இல்லாத பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

1990-களில், வங்கிகள் மூலம் விவசாயத்திற்கு வழங்கப்பட்ட கடனில், 2 இலட்ச ரூபாய்க்கும் குறைவாக வழங்கப்பட்ட கடன்களின் பங்கு 83 சதவீதமாக இருந்தது. இப்பங்கு 2009-இல் 44.3 சதவீதமாகக் குறைந்துவிட்டது. அதே சமயம், 1990-களில் 10 இலட்சம் தொடங்கி 25 கோடிக்கும் மேல் வழங்கப்பட்ட விவசாயக் கடனின் பங்கு 13.1 சதவீதமாக இருந்தது, இது, 2009-இல் 33.1 சதவீதமாக உயர்ந்துவிட்டது. 2008-ஆம் ஆண்டு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட விவசாயக் கடனில் 20 சதவீதக் கடன்கள் பெருநகரங்களிலுள்ள வங்கிக் கிளைகளிலிருந்தும், 14 சதவீதக் கடன்கள் நகர்ப்புறங்களைச் சேர்ந்த வங்கிக் கிளைகளிலிருந்தும்தான் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, விவசாயிகள் தற்கொலை பெருமளவில் நடந்துவரும் மகாராஷ்டிரா மாநிலத்தில் 58 சதவீத விவசாயக் கடன்கள் பெருநகர மற்றும் நகர்ப்புற வங்கிக் கிளைகளிலிருந்துதான் வழங்கப்பட்டுள்ளன.

கிராமத்து விவசாயிகள் பிழைப்பு தேடித்தான் சென்னை, மும்பய் போன்ற பெருநகரங்களை நோக்கி ஓடுகிறார்களே தவிர, பயிர்க் கடன் பெறுவதற்காக நகரத்துப் பக்கம் ஒதுங்குவதில்லை. பணப்பயிர் விவசாயத்தில் மட்டுமின்றி, உணவுப் பதப்படுத்துதல், சிப்ஸ் போன்ற நொறுக்குத் தீனி தயாரித்தல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த மதிப்புக் கூட்டுத் தொழில்களில் இறங்கியுள்ள ஐ.டி.சி., ரிலையன்ஸ், பிர்லா போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள்தான் விவசாயக் கடன்களைச் சுருட்டி வருகின்றன என்பதைத்தான் இப்புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வங்கி கடன் மட்டுமின்றி, இக்கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விவசாயத்தை ஊக்குவிப்பது என்ற பெயரில் வட்டித் தள்ளுபடி, வரி விலக்கு, ஏற்றுமதி மானியம் எனவும் பல்வேறுவிதமான சலுகைகள் கொட்டிக் கொடுக்கப்படுகின்றன.

•••

அரசின் விவசாயக் கடன் கொள்கை மட்டுமல்ல, பட்ஜெட்டில் விவசாயம், கல்வி, மருத்துவம், சமூக நலத் திட்டங்கள், கனரகத் தொழில்கள், அடிக்கட்டுமான தொழில்கள், இராணுவம் எனப் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி, மானியம் ஆகிய அனைத்தும் மக்களின் நலனை முன்னிறுத்துவதைவிட, கார்ப்பரேட் நிறுவனங்களின் இலாபத்தைத்தான் முன்னிறுத்துகின்றன. இத்துறைகள் தொடர்பாக பட்ஜெட்டில் அறிவிக்கப்படும் திட்டங்கள், கொள்கை முடிவுகளும் கார்ப்பரேட் நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கு ஏற்றபடிதான் வகுக்கப்படுகின்றன.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த உணவுப் பொருள் விநியோக சங்கிலித் தொடரை முறைப்படுத்த வேண்டும் என பட்ஜெட்டில் நிதியமைச்சர் அறிவித்துள்ளார். இதன்பொருள், உணவுப் பொருள் கொள்முதல், சேமிப்பு, விநியோகம், விற்பனை ஆகியவற்றில் இந்தியத் தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் இன்னும் அதிக அளவில் நுழைவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பது தவிர வேறில்லை. இதற்கு ஏற்பவே, வேளாண் விளைபொருட்களைச் சேமித்து வைப்பதற்கான குளிர்சாதனக் கருவிகளுக்கு உற்பத்தி வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

வடகிழக்கு மாநிலங்களிலும் பசுமைப் புரட்சியை நடைமுறைப்படுத்த 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பசுமைப் புரட்சி என்பது விவசாயிகளை விதை, உரம்-பூச்சி மருந்து தயாரிக்கும் நிறுவனங்

களின் பிடியில் சிக்க வைக்கும் பொறி என்பதைத்தான் பஞ்சாப் மற்றும் பிற மாநில விவசாயிகளின் அனுபவங்கள் நிரூபிக்கின்றன. எனவே, இத்திட்டம் வடகிழக்கு மாநிலங்களைப் பன்னாட்டு விவசாயக் கழகங்களின் கொள்ளைக்குத் திறந்துவிடும் நரித்தனம் தவிர வேறில்லை. இதுபோல, வேளாண் விளைபொருட்கள் வீணாவதைத் தடுக்கத் தனியாருடன் இணைந்து 15 உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்ற திட்டம், உணவுப் பொருட்களைச் சட்டபூர்வமாகப் பதுக்கி வைத்துக் கொள்ளத் தனியார் முதலாளிகளுக்குத் தரப்படும் லைசென் தவிர வேறென்னவாக இருந்துவிட முடியும்? ‘‘விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ள பட்ஜெட்’’ என இப்பட்ஜெட்டை கார்ப்பரேட் முதலாளிகள் பாராட்டுவதன் பின்னேயுள்ள இரகசியங்கள் இவைதான்.


‘வல்லரசின்’ நோஞ்சான் குழந்தை

இந்த ஆண்டு பட்ஜெட்டில் இராணுவத்துக்கு 1,64,415 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் இராணுவத் தளவாடங்கள் வாங்குவதற்காகவே 69,199 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் பலனடையப் போவது பன்னாட்டு ஆயுத தொழிற்கழகங்களும், அவர்களின் இந்தியத் தரகர்களும், இராணுவ அதிகாரிகளும்தான். இக்கும்பலுக்குக் கிடைக்கும் இலாபமும், கமிஷனும் தேசப் பாதுகாப்பு என்ற போர்வையின் மூலம் வெளியே தெரியாமல் மூடப்படுகிறது.

இந்தியாவிலுள்ள 2.5 இலட்சம் கிராமப் பஞ்சாயத்துக்களையும் இணைய தள வலைப் பின்னலின் கீழ் கொண்டு வருவதற்காக இந்த பட்ஜெட்டில் 10,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயம் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ள இந்த வலைப்பின்னல் பயன்படும் எனக் கூறுகிறது அரசு. விவசாயம் நசிவடைந்து வரும் வேளையில், விளைபொருட்களை இன்று சந்தைக்கு எடுத்துப் போகலாமா, இல்லை ரோட்டில் கொட்டிவிட்டுத் தலையில் துண்டைப் போட்டுக் கொள்ளலாமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் இந்த வலைப்பின்னல் விவசாயிகளுக்குப் பயன்படலாம். இந்த நிதி தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் இலாபத்தைக் கூட்டுவதற்குப் பயன்தரும் அளவிற்கு கிராமத்து மக்களுக்குப் பயன்படப் போவதில்லை.

**உணவு மானியத்திற்குக் கடந்த ஆண்டு ஒதுக்கியதைவிட 27 கோடி ரூபாய் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவரப் போவதாகச் சவடால் அடித்து வரும் ஆளும் கும்பல், இந்த பட்ஜெட்டில் அதற்காக ஒரு நயா பைசாகூட நிதியாக ஒதுக்கவில்லை**

அதிவிரைவுச் சாலைகள், அடுக்கு மேம்பாலங்கள், சர்வதேசத் தரம் வாய்ந்த விமான நிலையங்கள் போன்ற அடிக்கட்டுமான வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் இந்த பட்ஜெட்டில் 2,14,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தை மேம்படுத்துவது என்ற பெயரில் கொண்டுவரப்படும் இத்திட்டங்கள் நகர்ப்புற ஏழை மக்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து துரத்தியடித்து வருவதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. இத்திட்டங்களை உருவாக்க ஆலோசனை வழங்குவதிலிருந்து, இத்திட்டங்களை நிறைவேற்றி, அதன் பின் சுங்கக் கட்டணம் வசூலிப்பது வரை அனைத்தும் தனியாரிடம்தான் ஒப்படைக்கப்படுகிறது. எனவே, இந்த அடிக்கட்டுமான வளர்ச்சிக்கான நிதி கட்டுமான கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், சொகுசு கார்களில் பறக்கும் மேட்டுக்குடிக் கும்பலுக்கும், அக்கார்களைத் தயாரித்துவரும் பன்னாட்டு கார் கம்பெனிகளுக்கும்தான் பெரும் பயனைக் கொடுக்கும்.

| கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட வரிச்சலுகைகள் காரணமாக ஏற்பட்ட வருமான இழப்பு (ரூபாய் கோடிகளில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2005-06 | 2006-07 | 2007-08 | 2008-09 | 2009-10 | 2010-11 | 2005-06 முதல் 2010-11 முடிய மொத்த வருமான இழப்பு |
| கார்ப்பரேட் வருமான வரி | 34618 | 50075 | 62199 | 66901 | 72881 | 88263 | 374937 |
| உற்பத்தி வரி | 66760 | 99690 | 87468 | 128293 | 169121 | 198291 | 749623 |
| சுங்க வரி | 127730 | 123682 | 153593 | 225752 | 195288 | 174418 | 1000463 |
| மொத்தம் | 229108 | 273447 | 303260 | 420946 | 437290 | 460972 | 2125023 |

ஆதாரம்: பட்ஜெட் ஆவணங்கள்.

எரிசக்தித் துறை, கனிம வளத் துறை ஆகியவற்றுக்கு இந்த பட்ஜெட்டில் 2 இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறைகளில் தீவிரமாகத் தனியார் மயம் புகுத்தப்படும்பொழுது, இவ்வளவு பெரிய தொகையை அரசு மூலதனமாகப் போட வேண்டிய அவசியமென்ன? அரசு, தனது சொந்த செலவில் இத்துறைகளை மேம்படுத்தி, ரிலையன்ஸ், எஸ்ஸார் போன்ற தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் நோக்கத்தைத் தவிர, வேறென்ன நல்ல எண்ணம் இந்த நிதி ஒதுக்கீடின் பின்னே இருந்துவிட முடியும்?

• • •

**க**டந்த ஆண்டு பட்ஜெட்டில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வருமான வரி விலக்காக 88,263 கோடி ரூபாயும், சுங்க மற்றும் உற்பத்தி வரி விலக்காக 3,72,709 கோடி ரூபாயும் - ஆக மொத்தம் 4,60,972 கோடி ரூபாய் வரி விலக்காக அளிக்கப்பட்டது. இவ்வரி விலக்கு அதற்கு முந்தைய ஆண்டில் (2009-10) 4,37,290 கோடி ரூபாயாகும். 2005-06 ஆம் ஆண்டு தொடங்கி 2010-11 ஆம் ஆண்டு முடிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மொத்த வரி விலக்கு 21,25,023 கோடி ரூபாய்.

இவ்வரி விலக்குகள் ஒருபுறமிருக்க, 2005-06 ஆம் ஆண்டு தொடங்கி 2010-11 ஆம் ஆண்டு முடிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட வரிக் குறைப்பு 1,34,000 கோடி ரூபாய். இதுவன்றி, பொருளாதார நெருக்கடியைக் காரணமாகக் காட்டி 2008-09 ஆம் ஆண்டு தொடங்கி 2010-11 ஆம் ஆண்டு முடிய 3,36,000 கோடி ரூபாய் மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளது.

உணவுக்கும், உரத்திற்கும், கல்விக்கும், சுகாதாரத்திற்கும் மானியம் அளிப்பதைப் பொருளாதாரச் சுமையாகவும், பட்ஜெட் பற்றாக்குறையை அதிகரிப்பதாவும் குற்றஞ்சுமத்தி வரும் ஆளுங் கும்பல், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் இத்தகைய மானியங்களை நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமானதாகச் சித்தரிக்கின்றன. இச்சலுகைகளை முதலாளிகளின் தனிப்பட்ட இலாபத்திற்கு அளிக்கப்பட்டதாகக் கருதக் கூடாது என வாதிடுகின்றன.

முகேஷ் அம்பானிக்குத் தாரை வார்க்கப்பட்ட எரிவாயு வயல்களின் உற்பத்தியின் மீது முன் தேதியிட்டு 91,000 கோடி ரூபாய் வரித் தள்ளுபடி செய்வதற்கான முன்மொழிதலை ப.சிதம்பரம் 2009-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் முன்வைத்தார். ‘‘இந்த வரிச் சலுகை நாட்டின் எரிசக்தித் துறையின் வளர்ச்சிக்கு அவசியமானது’’ என காங்கிரசும், பா.ஜ.க.வும் ஒரசேர ஆதரித்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தன.

1,76,000 கோடி ரூபாய் பெறுமான 2 ஜி அலைக்கற்றையை அடிமாட்டு விலைக்கு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விற்றதை, கைபேசிக் கட்டணம் குறைந்ததைக் காட்டி தி.மு.க. - காங்கிரசு கும்பல் நியாயப்படுத்தியதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அலைக்கற்றை விற்பனையை அரசாங்கத்தின் வருமானத்தோடு முடிச்சுப் போட்டுப் பார்க்கக் கூடாதென்றும், நாட்டின் தொலைபேசிக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்திற்காகவே குறைவான கட்டணத்தில் அலைக்கற்றை விற்கப்பட்டதாகவும், உலகின் பல நாடுகளில் ஏலமுறை கைவிடப்பட்டதாகவும் கூறி, இந்த விற்பனையை நியாயப்படுத்தினார், மான்டேக் சிங் அலுவாலியா.

பொருளாதார நெருக்கடியைக் காரணமாகக் காட்டி, வைரம் பட்டை தீட்டும் தொழிலுக்கும், தங்கம் மற்றும் வைர நகைகள் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் கடந்த மூன்று ஆண்டுகளில் 95,675 கோடி ரூபாய் அளவிற்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்பட்டது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகளைக் காப்பாற்றவே இவ்வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக நியாயப்படுத்தியது, அரசு.

நாட்டின் வளர்ச்சியோடு சம்பந்தப்படுத்தி நியாயப்படுத்தப்படும் இந்த கார்ப்பரேட் வரி விலக்குகள் முதலாளிகளின் பணப் பெட்டியை நிரப்பிக் கொள்ளப் பயன்பட்டதேயொழிய, புதிய வேலைவாய்ப்புகளை

உருவாக்கவோ, இருக்கும் வேலைவாய்ப்புகளைப் பாதுகாக்கவோ, உற்பத்தி வளர்ச்சிக்கோ பயன்படவில்லை என்பதே உண்மை.

**கார்ப்பரேட் முதலாளித்துவக் கும்பலின் நலன்தான் மன்மோகன் சிங்கின் முதலும் முடிவுமான கொள்கை. ஓட்டுப் பொறுக்கவாவது ஒரு சில கவர்ச்சிகரமான மக்கள் நலத் திட்டங்களை பட்ஜெட்டில் அறிவிக்க வேண்டும் என்ற 'நல்லெண்ணம்' கூட இல்லாதவர்தான் மன்மோகன் சிங்**

குஜராத்தின் சூரத் நகரில் வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலைகளில் கூலி வேலை பார்த்து வந்த ஒரிசாவைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலையிழந்து சொந்த கிராமத்திற்குத் திரும்பியதாகவும், பல தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டதாகவும், மகாராஷ்டிரா மாநிலத்தில் இத்தொழிலில் இருந்து நாளொன்றுக்கு 1,800 தொழிலாளர்கள் வேலையிலிருந்து துரத்தப்பட்டதாகவும் கூறுகிறார், பத்திரிகையாளர் பி.சாய்நாத்.

''எந்த அளவுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு பொருள்களின் விலையை கம்பெனிகள் குறைக்க வேண்டும். ஆனால், நடந்ததோ விபரீதம். வரி விலக்குக் காரணமாக பொருள்களின் விலை குறையாமல் கம்பெனிகளின் இலாபம் பெருகியது. 2006-07 ஆம் ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்கள் அடைந்த இலாபம் 7.12 இலட்சம் கோடி ரூபாய். இது, பொருளாதரா நெருக்கடி உச்சத்திலிருந்த 2008-09 ஆம் ஆண்டில் 6.68 இலட்சம் கோடி ரூபாயாகக் 'குறைந்து', 2009-10 ஆம் ஆண்டில் 8.24 இலட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது'' என அம்பலப்படுத்துகிறார், சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் அகில இந்திய இணை அமைப்பாளர் எஸ்.குருமூர்த்தி.

இவ்விவரங்கள் அனைத்தும் இரகசியமானவை அல்ல. பட்ஜெட் ஆவணங்களிலேயே இவை தொகுக்கப்பட்டுள்ளன. ஆனாலும், பொருளாதார நெருக்கடி இன்னும் தொடருவதாகவும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த இவ்விலக்குகள் அவசியமானவை என்றும் கூறி, இச்சலுகைகள் இந்த பட்ஜெட்டிலும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வழங்கப்பட்டுள்ள இந்தச் சலுகைகளோடு ஒப்பிட்டால், இந்த பட்ஜெட்டில் நடுத்தர வர்க்கத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள வருமான வரிச் சலுகை; அங்கன்வாடி பணியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வு; தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கூலி உயர்வு போன்றவையெல்லாம் சுண்டைக்காய்தான்.

இதுவொருபுறமிருக்க, இந்த ஆண்டு பட்ஜெட்டில் உணவு மானியத்திற்குக் கடந்த ஆண்டு ஒதுக்கியதை விட 27 கோடி ரூபாய் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவரப் போவதாகச் சவடால் அடித்து வரும் ஆளும்கும்பல், இந்த பட்ஜெட்டில் அதற்காக ஒரு நயா பைசாகூட நிதியாக ஒதுக்கவில்லை. விலைவாசி உயரும் எனத் தெரிந்தும் மண்ணெண்ணெய்க்கும் சமையல் எரிவாயுவுக்கும் வழங்கப்பட்டு வரும் மானியத்தில் 15,000 கோடி ரூபாயையும், உர மானியத்தில் 5,000 கோடி ரூபாயையும் வெட்டிவிட்டது.

. வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தைக் கைப்பற்றிக் கொண்டுவருவது பற்றி உச்ச நீதிமன்றம் சண்டமாருதம் செய்து கொண்டிருக்க, மன்மோகன் சிங் அரசோ கறுப்புப் பணத்தைக் கொல்லைப்புற வழியில் வெள்ளையாக்கிக் கொள்ளுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கும் இரண்டு திட்டங்களை, அந்நிய முதலீட்டைக் கவருவது என்ற பெயரில் பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறது. மேலும், 2 ஜி, 3 ஜி அலைக்கற்றைகளுக்கு அடுத்து, 40,000 கோடி ரூபாய் பெறுமான பொதுத்துறை நிறுவனப் பங்குகளை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரிக் கொடுக்கும் திட்டமும் பட்ஜெட்டில் வெளியாகியிருக்கிறது.

கார்ப்பரேட் முதலாளித்துவக் கும்பலின் நலன்தான் மன்மோகன் சிங்கின் முதலும் முடிவுமான கொள்கை. ஓட்டுப் பொறுக்கவாவது ஒரு சில கவர்ச்சிகரமான மக்கள் நலத் திட்டங்களை பட்ஜெட்டில் அறிவிக்க வேண்டும் என்ற 'நல்லெண்ணம்'கூட இல்லாதவர்தான் மன்மோகன் சிங். தனியார்மய - தாராளமயக் கொள்கைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தாததால்தான் விலைவாசி உயர்வு, விவசாய உற்பத்தி வீழ்ச்சி உள்ளிட்ட நெருக்கடிகள் உருவாகிவிட்டதாகவும், இக்கொள்கைகளை இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம்தான் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனத் திரும்பத் திரும்பக் கூறி வரும் அவரது அரசு, அதற்கேற்றபடிதான் இந்த ஆண்டு பட்ஜெட்டையும் தயாரித்து அளித்திருக்கிறது.

தென் அமெரிக்க நாடுகளில் கார்ப்பரேட் நிறுவனங்கள் இப்படிப் பகற்கொள்ளை அடிப்பதற்கு அங்கெல்லாம் வெளிப்படையான இராணுவ சர்வாதிகார ஆட்சியோ அல்லது ஒரு கட்சி பாசிச ஆட்சியோ நிறுவப்பட்டது. இந்தியாவிலோ, நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் மூலமே, கார்ப்பரேடிசம் என்ற இப்பாசிசம் சட்டபூர்வமான முறையிலேயே திணிக்கப்படுகிறது.

● செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி




- குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் ''வீதியில் இறங்குவோம்! விடுதலைக்காக வீறுகொண்டு எழுவோம்!'' என்ற தலைப்பில் பொதுக்கூட்டத்தை நடத்தினர். மாவட்டச் செயலர் தோழர் உஷா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெ.வி.மு. தோழர் அமிர்தா, ம.க.இ.க. தோழர் துரை.சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ம.க.இ.க. இளம் தோழர்களின் ''வேலை வேணுமா?'' என்ற காட்சி விளக்கப் பாடலும், பெ.வி.மு. தோழர்கள் பாடிய ''கிணத்துல தொங்குறது வாளி.. பெண்கள் கழுத்துல தொங்குறது தாலி'' என்ற பெண்ணடிமைத்தனத்தைச் சாடிய பாடலும் பார்வையாளர்களாகத் திரண்டிருந்த உழைக்கும் வர்க்கப் பெண்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தின.

கில் அரங்கக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கீதா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், வி.வி.மு. தோழர் முத்து மற்றும் பெ.வி.மு. தோழர் செல்வி ஆகியோர், ஆணாதிக்கக் கணவனிடமிருந்து விவாகரத்து பெறுவது மட்டுமே பெண் விடுதலையாகாது என்பதையும், சமூக - அரசியல் - பொருளாதார அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதே பெண்களுக்கு உண்மையாக விடுதலையாக அமையும் என்பதையும் விளக்கி சிறப்புரையாற்றினர். உழைக்கும் வர்க்கப் பெண்கள் குழந்தைகளோடு திரளாகப் பங்கேற்ற இந்தக் கூட்டம், பகுதிவாழ் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைப்பதாக அமைந்தது.

ஓசூரில்...

மார்ச் 8 அன்று மகளிர் தினத்தையொட்டி பு.ஜ.தொ.மு. சார்பில் திரளான தோழர்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் கலந்து கொண்ட அரங்கக் கூட்டம் நடைபெற்றது. மக.இ.க.தோழர் துரை. சண்முகத்தின் ''வரலாற்றைப் படித்து வர்க்கமாய் எழு தோழி!'' எனும் கவிதை வரிகள் ஆங்காங்கே முழக்கம் போல அரங்கம் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன. பெண் தோழர்கள் தங்கள் அனுபவங்களை விவரித்து உரையாற்றிய பின்னர், பு.ஜ.தொ.மு. மாவட்டச் செயலர் தோழர் சங்கர், பொருளாளர் தோழர் சந்தோஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சென்னையில்...

நூறாவது மகளிர் தினத்தையொட்டி தாங்கள் செயல்படும் பகுதிகளில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட பெ.வி.மு. அமைப்பினர், அதன் தொடர்ச்சியாக மார்ச் 8 அன்று சென்னை

மதுரையில்...

ஒத்தக்கடை சீதாலட்சுமி நகரில் மார்ச் 8 அன்று மாலை 5 மணியளவில் ம.க. இ.க; பு.மா. இ.மு. அமைப்புகள் இணைந்து பாடல்கள், கவிதை வாசிப்பு, நாடகம், ஆவணப்படம் ஆகியவற்றுடன் அரங்கக் கூட்டம் நடத்தி அனைத்துலக உழைக்கும் மகளிர் தினத்தை எழுச்சியோடு கொண்டாடி




சூளுரை ஏற்றன. தோழர் கல்பனா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மருத்துவர் அம்பிகா, ம. உ. பா. மையத்தின் வழக்குரைஞர் தோழர் வாஞ்சிநாதன் ஆகியோர், மறுகாலனியாக்கத்தின் கீழ் இந்தியப் பெண்கள் பாலியல் நுகர்பொருளாகவும் உரிமைகளற்ற அடிமைகளாகவும் மாற்றப்பட்டிருப்பதையும், உலகமயமாக்கம் உழைக்கும் வர்க்கப் பெண்களை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் நோயாளிகளாக மாற்றி வருவதையும் விளக்கி, போராட அறைகூவினர். அரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த பெண்கள் மீதான அடக்குமுறைகளையும் அதற்கெதிரான போராட்டங்களையும் சித்தரிக்கும் புகைப்படக் காட்சி, பார்வையாளர்களுக்குப் போராட்ட உணர்வூட்டுவதாக அமைந்தது. நாமக்கல் அருகே தன் மகன் சோறு திருடித் தின்றதை அறிந்து மனமுடைந்து தற்கொலை செய்து கொண்ட தாயின் அவலத்தைச் சித்தரித்த நாடகம், உழைக்கும் வர்க்கத்தின் நேர்மையையும் தாராளமயத்தின் கொடூரத்தையும் கண்முன்னே நிறுத்தியது.





- பு.ஜ. செய்தியாளர்கள்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# பட்ஜெட்டின் நரபலி

பெங்களூருவிலிருந்து சுமார் 60-70 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வாலாகேரே தோடி என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சுவாமி கௌடாவும், அவரது மனைவி வசந்தாவும் கடந்த மார்ச் மாதம், பட்ஜெட் வெளியான அடுத்த சில நாட்களில், ஒருசேரத் தற்கொலை செய்து கொண்டனர். சுவாமி கௌடா மல்பெர்ரி மரங்கள் வளர்ந்து நிற்கும் தனது வயலில் தூக்கு மாட்டிக் கொள்ள, அவரது மனைவி வசந்தாவோ பட்டுப்பூச்சி வளர்க்கும் கொட்டகையின் உத்திரத்தில் தூக்கு மாட்டிக் கொண்டு தமது உயிர்களை மாய்த்துக் கொண்டனர்.



தற்கொலை செய்து கொண்ட சுவாமி கௌடா - வசந்தா தம்பதியினர் (இடது):
அநாதைகளாகி நிற்கும் அவர்களது மூன்று குழந்தைகள்.

பட்டுப்பூச்சி வளர்க்கும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வந்த சுவாமி கௌடாவுக்குக் கடந்த இரண்டு அறுவடைகளும் அடுத்தடுத்து பாழாகிவிட்டிருந்தன. இதுவன்றி, அவருக்கு ஒரு இலட்ச ரூபாய்க்கும் மேல் கடனும் இருந்தது. சந்தையில் ஒரு கிலோ கூட்டுப் புழுவின் விலை ரூ.300/-ஐத் தாண்டி விற்றுக் கொண்டிருந்ததால், நடப்பு அறுவடையின் மூலமாவது தனது கடனை ஓரளவு திருப்பிச் செலுத்தி விடலாம் என எண்ணிக் கொண்டிருந்தார், சுவாமி கௌடா. அவரது நம்பிக்கையில் இடியைப் போல இறங்கியது 2011-12-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்.

2,500 டன் கச்சா பட்டு நூலை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யத் திட்டமிட்டிருந்த மைய அரசு, அதற்கேற்ப இந்த ஆண்டு பட்ஜெட்டில் இறக்குமதி பட்டின் மீது விதிக்கப்பட்டு வந்த சுங்க வரியை 30 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகக் குறைத்தது. இதனையடுத்து சந்தையில் முன்னூறு ரூபாய்க்கு மேல் விற்றுக் கொண்டிருந்த ஒரு கிலோ கூட்டுப் புழுவின் விலை 120/- ரூபாயாகக் குறைந்தது. இந்தத் தாராள இறக்குமதியும், அதனால் ஏற்பட்ட திடீர் விலைச்சரிவும்தான் சுவாமி கௌடா - வசந்தா தம்பதியினரின் உயிருக்கு உலை வைத்துவிட்டது.

கூட்டுப்புழு விலை வீழ்ச்சியைக் கண்டித்து பெங்களூருவில் உள்ள பட்டுப்பூச்சி வளர்ப்பு இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தும் விவசாயிகள்.



பட்டுநூல் உற்பத்தியில் நிலவும் பற்றாக்குறையை ஈடுகட்ட, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு விவசாயிகளுக்குப் போதிய ஆதரவு வழங்கி உற்பத்தியைப் படிப்படியாகப் பெருக்க விரும்பாத அரசு, பட்டு நூல் இறக்குமதிக்குச் சலுகை வழங்குவதன் மூலம், அவ்வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பணப்பெட்டியை நிரப்புவதற்குத் துணை நிற்கிறது. கச்சா பட்டின் மீதான இறக்குமதி வரிக் குறைப்பு ஒருபுறமிருக்க, பட்டுப்பூச்சி வளர்ப்பிற்கு அளித்து வந்த ஆதரவையும் அரசு படிப்படியாகக் கைகழுவி வருகிறது.

குறிப்பாக, பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில் மிகப்பெரிய அளவில் நடக்கும் கர்நாடகாவில் பட்டுப்பூச்சி முட்டைகளை கிலோ முன்னூறு ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விற்று வந்ததை அம்மாநில அரசு நிறுத்தி விட்டதால், விவசாயிகள் ஒரு கிலோ முட்டையை ரூ.1,800/- வரை கொடுத்துத் தனியாரிடமிருந்து வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கூட்டுப்புழுக்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்க மறுத்து வருவதோடு, அரசே கூட்டுப்புழுக்களை வாங்கி வந்த நடைமுறையும் படிப்படியாகக் கைகழுவப்படுகிறது

மைய அரசு தனது பட்ஜெட்டை ஏழை எளிய மக்களுக்கான பட்ஜெட் எனக் கூறி வருவது மிகப் பெரிய மோசடி என்பதை சுவாமி கௌடா - வசந்தா தம்பதியினரின் தற்கொலை அம்பலப்படுத்திவிட்டது. அரசு அளித்துள்ள இறக்குமதி வரிக்குறைப்பை மிகப்பெரிய பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொண்டிருக்க, பட்டுப்பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள கர்நாடகா, ஆந்திரா, தமிழகத்தைச் சேர்ந்த சிறு விவசாயிகள் இவ்வரிக் குறைப்பை நீக்கவும், கூட்டுப் புழுக்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்கவும், இறந்துபோன சுவாமி கௌடாவின் குடும்பத்திற்கு உரிய நட்ட ஈடு வழங்கவும் கோரிப் போராடி வருகின்றனர்.